# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர்: 05, இதழ்: 135 குரோதி வருடம், மார்கழி மாதம் 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை
(27.12.2024) ஹிஜ்ரி 1446, ஜ. ஆகிர் - 25, 0115 886187 - விலை ரூ.40 பக்கங்கள் 12




## கமெண்ட் கந்தர்...

13 ஆவது
திருத்தம்
இருந்தும்
என்ன பலன்?
இல்லாட்டியும்
என்ன குறை?
இல்லை
தெரியாமல்தான்
கேட்குறன்...






## உஷ்

பாதுகாப்புத்துறையில் அதிரடி மாற்றங்களை செய்வதற்கு அரச மேல்மட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதையடுத்து பாதுகாப்புத்துறைக்குள் சர்ச்சை நிலைமையொன்று ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

அரச புலனாய்வுத்துறையின் உயர்மட்ட பொறுப்புகளில் இருந்த சிலர் இடமாற்றப்படுவதால் பதவியில் இருக்கும் சிலரும் இராஜினாமா செய்யும் தீர்மானத்துக்கு சென்றுள்ளதாக அறியமுடிகின்றது. பாதுகாப்புத்துறையில் இதனால் ஏற்பட்டுள்ள குழப்ப நிலையை சமாளிக்க ஆலோசனைகளை நடத்துகிறதாம் அரசு.

# ‘13’ விடயத்தில் இந்தியா மௌனித்தால் தமிழர்கள் சிறந்த தெரிவை கண்டறியலாம்!

## கூறுகிறார் கஜேந்திரகுமார் எம்.பி.



Gajen Ponnambalam MP
@GGPonnambalam

I for one will be quite happy for India to stop talking about the 13A. After all a vast majority of the Tamils don't accept the 13A as a solution.

What is more important is that India signed the Indo Lanka accord on behalf of the Tamils. I would think that for as long as the Tamils retain faith in the accord, India is duty bound to intervene on behalf of the Tamil people.

But if India feels the accord itself is irrelevant in today's context, then that's another matter altogether. The sooner we find out the better.



- நமது அரசியல் செய்தியாளர் -

அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தம் தொடர்பாக இந்தியா இனிமேல் மௌனித்தால் பெருமளவு மகிழ்ச்சியடையக்கூடிய ஒருவராகத் தானே இருப்பாரென தமிழ்த் தேசிய மக்கள் முன்னணித் தலைவரும் யாழ்ப்பாண மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தனது எக்ஸ் தளத்தில் பதிவுசெய்திருக்கிறார். தங்களது பிரச்சினைக்குத் தீர்வாக 13ஆவது திருத்தத்தைப் பெரும்பான்மையான தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளவுமில்லையென்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

மூன்று வருடங்களில் புதிய அரசியலமைப்பு கொண்டுவரப்படும் வரை மாகாண சபைகள் முறை தொடர்ந்து இருக்குமென்று தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கூறிக்கொண்டிருந்தால் மாத்திரம் போதாது. மாகாண சபைத் தேர்தலை நடத்தி 13ஆவது திருத்தத்தை சாத்தியமானளவு அதிகாரங்களுடன் நடைமுறைப்படுத்துவதன் மூலம் அரசாங்கம் இது விடயத்தில் ஓரளவு நம்பகத்தன்மையைப் பெறமுடியுமென்று சிரேஷ்ட பத்திரிகையாளர் ஒருவர் எக்ஸ் தளத்தில் செய்த பதிவுக்குப் பதிலளித்தே கஜேந்திரகுமார் எம்.பி. மேற்கண்ட கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

மாகாண சபை முறைமையையோ அல்லது 13ஆவது திருத்தத்தையோ இல்லாமல் செய்வதற்கு இந்தியா ஒருபோதும் அனுமதிக்காது என்று வடக்கு, கிழக்கு தமிழ்க் கட்சிகள்...

» 02 பக்கம்

## கிளிநொச்சி இராணுவ நினைவு சின்னம் அகற்றப்பட வேண்டும்

### சிறிதரன் எம்.பி. கோரிக்கை




கிளிநொச்சி மாவட்டத்தின் நகரத் திட்டமிடலுக்குரிய காணிகளில் 36 வீதமானவை போர் முடிவுற்ற 14 ஆண்டுகளின் பின்னரும் இராணுவத்தினரால் விடுவிக்கப்படாமலுள்ளமை ...

» 02 பக்கம்

## ஹபரணை காட்டுக்குள் தீக்கிரையான கெப் வாகனத்திலிருந்து சடலம் மீட்பு





ஏ. பிர்தௌஸ்

பொலனறுவை-ஹபரணை வீதி காட்டுப்பகுதி யொன்றில் தீக்கிரையான கெப் வாகனத்திலிருந்து சடலமொன்றை மீட்டுள்ளதாக மின்னேரிய பொலிஸார் தெரிவித்தனர்.

மின்னேரிய வீதியின் 38ஆவது மைல்கல் பகுதியில்...

» 02 பக்கம்

## போக்குவரத்துப் பொலிஸுக்கு விசேட ஆலோசனைகள்

### பதில் பொலிஸ் மா அதிபரால் அறிவிப்பு



வாகனப் போக்குவரத்துக் கடமையில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள் இரவு வேளைகளில் வாகனங்களை நிறுத்தும்போது செயற்பட வேண்டிய விதம் தொடர்பில் பதில் பொலிஸ் மா அதிபரால் விசேட ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

அதற்கமைய, குறித்த வாகனப் போக்குவரத்து அதிகாரியின் உருவம் சாரதிகளுக்குத் தெரியக்கூடிய வகையில்...

» 02 பக்கம்

## அரகலயவுக்குப் பின்னர் 6,000 அரசியல்வாதிகள் ஓய்வு

2022ஆம் ஆண்டு கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்துக்கு எதிரான ‘அரகலய’ போராட்டத்தின் பின்னர் பல்வேறு காரணங்களுக்காக 6,000 அரசியல்வாதிகள் அரசியலிலிருந்து விலகியுள்ளதாக தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் தெரிவிக்கின்றன.

இந்த விடயம் தொடர்பில் பெவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாரச்சி கருத்துத் தெரிவிக்கையில்,

“போராட்டத்தின் பின்னர் பல அரசியல்வாதிகள் நம்பிக்கையிழந்து அரசியலிலிருந்து விலகியுள்ளனர்.

அத்துடன், பல்வேறு நிலைகளிலுள்ள அரசியல்வாதிகள்...

» 02 பக்கம்









»03 பக்கம்

## பிரதமருக்கு எதிராக நீதிமன்றத்தில் மனு

பிரதமர் ஹரிணி அமரசூரியவுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

றுஹுணு பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் சுஜீவ அமரசேனவே அந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

» 02 பக்கம்





20ஆவது ஆண்டு சுனாமி நினைவேந்தல் நிகழ்வு யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்கு, உடுத்துறை சுனாமி நினைவாலயத்தில் நேற்று அனுஷ்டிக்கப்பட்டபோது இறந்தவர்களின் உறவுகள் கதறியழும் காட்சி... (பு.கஜிந்தன்)

# அரசு அரிசி இறக்குமதி செய்யும் நடவடிக்கை தொடர் ஸ்தம்பிதம்

*(நா.தினுஷா)*

நாட்டில் அரிசித் தட்டுப்பாடு நிலவுகின்ற போதிலும், அரிசி இறக்குமதிக்காக அரசாங்கத்தரப்பில் மேற்கொள்ளப்பட்ட விலைமனுகோரலில் ஏற்பட்டுள்ள சிக்கல் நிலைமையின் காரணமாக இதுவரையில் அரசாங்கத்தினால் சிறிய தொகை அரிசியைக் கூட இறக்குமதி செய்ய முடியாமல் போயுள்ளதாக அறியமுடிகிறது.

அதற்கமைய, இதுவரையில் ஒரு நெல்மணியைக் கூட அரசாங்கம் இறக்குமதி செய்யவில்லையென சுங்கத் திணைக்களத்தின் தகவல்கள் தெரிவித்துள்ளன.

இருந்தபோதும், அரச வர்த்தக கூட்டுத்தாபனம் மற்றும் சதொசவினூடாக அரிசி இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டாலும், சதொசவினூடாக முன்வைக்கப்பட்டுள்ள இரு விலைமனுகோரல்கள் தொடர்பில் சிக்கல்நிலை ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் அரிசி இறக்குமதி நடவடிக்கைகள் எதிர்வரும் ஜனவரி மாதம் 10ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கான வர்த்தமானி அறிவித்தல் கடந்த 24ஆம் திகதி வெளியிடப்பட்டது.

அவ்வாறே இடைநிறுத்தப்பட்டிருந்த இறக்குமதி செய்யப்பட்ட அரிசி தொகையை சுங்கத்திலிருந்து விடுவிக்கும் பணிகள் நேற்றிலிருந்து (26) ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சுங்கத் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகம் சீவலி அருகொட தெரிவித்துள்ளார்.

அதற்கமையை மீண்டும் அரிசி இறக்குமதிசெய்ய தனியார் அரிசி இறக்குமதியாளர்கள் தீர்மானித்துள்ளதுடன் நேற்றிலிருந்து அரிசி கொள்முதல் நடவடிக்கைகளை மீள ஆரம்பித்துள்ளதாக இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நாட்டில் நிலவும் அரிசி நெருக்கடிக்கு தீர்வாக தனியார்த் துறையினர் நேரடியாக அரிசி இறக்குமதி செய்வதற்காக கடந்த 04 ஆம் திகதியிலிருந்து 20ஆம் திகதிவரை அனுமதி வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த காலப் பகுதியில் நாட்டுக்கு 67,000 மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டிருந்தது.

அரச வர்த்தக கூட்டுத்தாபனத்தால் இறக்குமதி செய்யப்பட்ட 780 மெற்றிக் தொன் அரிசி தொகை விரைவில் நாட்டை வந்தடையும் என விவசாய பிரதி அமைச்சர் நாமல் கருணாரத்ன நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இதேவேளை, சந்தை விலை நிலைவரப்படி, நேற்று முன்தினம் (25) சந்தைகளில் ஒரு கிலோ சம்பா அரிசி 235 ரூபாவிலிருந்து 245 ரூபா வரையும் ஒருகிலோ நாட்டரிசி 225 ரூபா முதல் 235 ரூபா வரையிலும் விற்பனை செய்யப்பட்டுள்ளதாக மத்திய வங்கி விலை பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் அரிசியை விற்பனை செய்வது தொடர்பில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளதாக இலங்கை சிறிய மற்றும் நடுத்தர அரிசி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் யூ.கே.சேமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்திய சந்தையில் ஒருகிலோ நாட்டரிசி 220 - 240 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுவதாகவும் அவ்வாறு இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ அரிசிக்கு அரசாங்கம் அறவிடும் 65வீத வரியுடன் பார்க்கும்போது 210 - 200 ரூபா வரையில் அரிசி விலை அதிகரிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதன் காரணமாகவே தனியார் அரிசி இறக்குமதியாளர்கள் வெளிநாட்டிலிருந்து அரிசி இறக்குமதி செய்வதில் விருப்பமின்மையை காட்டுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# ஐயப்ப பக்தர்களின் இந்தியப் பயணத்தை புனித யாத்திரையாக பிரகடனப்படுத்த ஆலோசனை





ஐயப்ப சுவாமி தரிசனத்துக்காக இந்தியா செல்லும் இந்து பக்தர்களுக்கு எதிர்காலத்தில் ஒரு அங்கீகாரத்தை பெற்றுக்கொடுப்பதற்கும் அது ஒரு புனித யாத்திரையாக மேற்கொள்வது தொடர்பாக நேற்று (26) புத்தசாசன சமய மற்றும் கலாசார அலுவலர்கள் அமைச்சர் கலாநிதி ஹினிதும் சுனில் செனவி, பிரதி அமைச்சருக்குமிடையிலான கலந்துரையாடல் புத்தசாசன மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சில் இடம்பெற்றிருந்தது.

இக்கலந்துரையாலின்போது இந்து சமய கலாசார அலுவலர்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் உட்பட உத்தியோகத்தர்களும் இரண்டு அமைச்சுகளின் செயலாளர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப்பின் வேண்டுகோளுக் கிணங்க குறித்த கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.

மேலும், இலங்கையிலிருந்து அதிகமான ஐயப்ப பக்தர்கள் வழிபாட்டுக்காக இந்தியா செல்கின்றார்கள்.

இவ் யாத்திரையினை புனித யாத்திரையாக பிரகடனப்படுத்துதல் சம்பந்தமாக ஆலோசனைகளை அமைச்சர் வழங்கியதோடு இது சம்பந்தமாக சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு இந்து சமய கலாசார அலுவலகத்தின் பணிப்பாளர் உட்பட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டது.

எதிர்காலத்தில் இந்தியா செல்லும் இந்து பக்தர்களுக்கு இதன் மூலமாக அங்கீகாரம் கிடைப்பதோடு அது ஒரு புனித யாத்திரையாக கௌரவம் பெறும் என பிரதி அமைச்சர் தெரிவித் திருந்தார்.







**ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் கூட்டம் கொழும்பிலுள்ள ஈரான் கலாசார நிலையத்தில் கவுன்சிலர் கலாநிதி மொசாமி குட்ரசல் மற்றும் ஈரானிலிருந்து வருகை தந்த அறிஞர் குஜ்ஜத் இஸ்லாம் ஹர்த்தகப் ஆகியோரின் இணைத் தலைமையில் நேற்று (26) இடம்பெற்றபோது... (அஷ்ரப் ஏ.சமத்)**

# முதலாம் தரத்துக்கு மாணவர்களை சேர்க்கும் நடவடிக்கை ஜனவரி 30இல்



அரச பாடசாலைகளில் 2025 ஆம் ஆண்டில் முதலாம் தரத்துக்கு மாணவர்களை இணைத்துக்கொள்ளும் செயற்பாடுகள் எதிர்வரும் ஜனவரி 30 ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெறுமென்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

முதலாம் தரத்துக்கு இணைத்துக்கொள்ளும் மாணவர்கள் பட்டியலுக்கு மாணவர்களை அடையாளம் காணும் வேலைத்திட்டம் கட்டாயம் சகல பாடசாலைகளிலும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று கல்வி அமைச்சின் செயலாளர் வெளியிட்ட சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வேலைத்திட்டம் ஜனவரி மாதம் 31 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என்பதுடன் பெப்ரவரி மாதம் 17ஆம் திகதிவரை பத்து நாட்களுக்கான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று அந்த சுற்றறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# போர் வீரர் நலனை ஆராயும் குழு தொடர்பில் மீளாய்வு

நாட்டின் சுதந்திரத்துக்காக உயிர்நீத்த போர் வீரர்களின் குடும்ப உறுப்பினர்களின் நலன் மற்றும் போரில் காயமடைந்து அங்கவீனமுற்ற போர்வீரர்கள் நலன்கள் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக நியமிக்கப்பட்ட சபையின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்கான கலந்துரையாடல் ஒன்று பாதுகாப்பு பிரதி அமைச்சர் மேஜர் ஜெனரல் அருண ஜயசேகர (ஓய்வு) தலைமையில் நேற்று (26) பிரதி அமைச்சரின் அலுவலகத்தில் இடம்பெற்றது.

மேற்படி விடயம் தொடர்பில் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது, பாதுகாப்பு பிரதி அமைச்சர் மற்றும் ரணவிரு சேவா அதிகார சபையின் தலைவரின் ஆலோசனையின் பேரில் ஸ்தாபிக்கப்பட்ட இச்சபையின் தலைவராக பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர்-பாதுகாப்பு நியமிக்கப்பட்டார். அத்துடன் முப்படைகளின் நலன்புரி பணிப்பாளர்களும் இதில் அடங்குவார்கள்.

இன்றைய கலந்துரையாடலில், போர் வீரர்கள் மற்றும் போர்வீரர்களின் குடும்ப உறுப்பினர்கள் எதிர்நோக்கும் நீண்டகால பிரச்சினைகளை சரியான முறையில் கண்டறிதல் மற்றும் தீர்வு காணப்படாத பிரச்சினைகளுக்கு விரைவான தீர்வுகளை வழங்குவது குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

இதற்கமைய, ஒரு கட்டமைக்கப்பட்ட மற்றும் கூட்டுச் செயல்முறை மூலம் போர் வீரர்களின் நலனை உறுதிசெய்து அவர்களின் தேவைகளுக்கு மிகவும் பயனுள்ள தீர்வுகளை வழங்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

# சிப்பிமடு பகுதியில் ஆணொருவரின் சடலம் மீட்பு

*(வீரமுனை நிருபர்)*

மட்டக்களப்பு மாவட்டத்தின் வவுணதீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிப்பிமடு பகுதியில் உள்ள நீர்நிலையிலிருந்து ஆண் ஒருவரின் சடலம் நேற்று (26) மீட்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்டவர் வவுணதீவு, காந்திநகர் சின்னசிப்பிமடு பகுதியைச் சேர்ந்த 51வயதுடைய பொன்னம்பலம் சிங்கநாயகம் என அடையாளம் காணப்பட்டுள்ளதாக வவுணதீவு பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த திங்கட்கிழமை காலையில் வீட்டிலிருந்து சென்றவர் இதுவரையில் வீடு திரும்பாத நிலையில் உறவினர்கள் தேடியுள்ளனர். இந்நிலையில் சடலமாக குறித்த பகுதியிலிருந்து மீட்கப்பட்டுள்ளதாக உறவினர்கள் தெரிவித்தனர்.

குறித்த பகுதிக்கு வந்த வவுணதீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டதுடன், மரண விசாரணைகளை தொடர்ந்து சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

சடலம் அழுகிய நிலையில் காணப்படுவதுடன், உடலில் சில காயங்களும் காணப்படுவதாக சடலத்தினை பார்வையிட்ட உறவினர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பான விசாரணைகளை வவுணதீவு பொலிஸ் நிலையப் பொலிஸார் முன்னெடுத்துவருகின்றனர்.

## அரகலயவுக்கு...

மற்றும் அரசியலுடன் தொடர்புடைய மேலும் 2,000 பேர் இந்த நாட்டை விட்டு வெளியேறி வேறு நாடுகளுக்குச் சென்றுள்ளனர்.

மேலும், ஏனைய கட்சிகளை உருவாக்குதல், ஏனைய கட்சிகளுடன் இணைதல் போன்ற பல்வேறு காரணங்களால் கடந்த காலங்களில் சுமார் 30 அரசியல் கட்சிகள் செயலிழந்துள்ளன.

இந்நிலையில், கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வேட்புமனு கோரப்பட்ட நிலையில் 8,000க்கும் அதிகமான வேட்பாளர்கள் தோற்றியிருந்த தேர்தலில் இப்போது போட்டியிட்ட கட்சிகளில் இல்லை என்பது தெரியவந்துள்ளது" என்றார்.

## பிரதமருக்கு...

அவர் தனது மனுவில், றுஹுணு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவியில் இருந்து தான் அகற்றப்பட்டமையானது ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருடன் தொடர்புடைய அரசியல் காரணங்களின் அடிப்படையில் நடைபெற்றுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

மேலும், கல்வி அமைச்சர் என்ற வகையில் பிரதமர் ஹரிணி இந்த வழக்கின் முதல் பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டுள்ளார்.

அத்துடன், கல்வி அமைச்சின் செயலாளர், பல்கலைக்கழக ஆசிரியர்கள் கூட்டமைப்பு ஆகியோர் ஏனைய பிரதிவாதிகளாக அந்த மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கிளிநொச்சி...

மாவட்டத்தின் அபிவிருத்தியில் பாரிய பின்னடைவுகளை ஏற்படுத்தியுள்ளதாக நேற்று (26) நடைபெற்ற கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறித்த கூட்டத்துக்கான நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக்கொள்ளும் பொருட்டு, இராணுவத்தினர் வசமுள்ள காணிகளின் விடுவிப்பு, பூர்த்தி செய்யப்படாத வீட்டுத்திட்டங்களுக்கான விசேட நிதியீட்டங்களை குறித்த பயனாளிகளுக்குப் பெற்றுக்கொடுத்தல், மதுபானசாலைகளின் அனுமதிப்பத்திரங்களை இரத்துச் செய்தல், வட்டக்கச்சி அரசினர் விவசாயப் பண்ணையை இராணுவத்தினரிடமிருந்து விடுவித்தல் மற்றும் வெள்ளப் பாதிப்பினால் சேதமடைந்த வீதிகளின் புனரமைப்பு உள்ளிட்ட விடயங்கள் சார்ந்த முன்மொழிவுகள், சிறிதரன் எம்.பியால் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபருக்கு கடந்த 20ஆம் திகதி எழுத்துமூலம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.அதனடிப்படையில், நேற்று நடைபெற்ற கூட்டத்தில் குறித்த விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். கிளிநொச்சி மாவட்டச் செயலக வளாகம், கலாசார மண்டபம் அமைக்கப்பட்டிருந்த காணி, கிளிநொச்சி மத்திய கல்லூரியின் பயன்பாட்டுக்கு உகந்த சந்திரன் பூங்கா காணி உள்ளிட்ட நகர்ப்புறக் காணிகள் பலவற்றை இன்றளவும் இராணுவத்தினர் கையகப்படுத்தியுள்ளனர்.

அதேவேளை, நகரின் முதன்மைப் பாடசாலைகளுள் ஒன்றான கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின் மைதானத்துக்கான பாதையை விடுவிக்குமாறு கடந்த காலங்களில் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்ட சமநேரத்தில் கடந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் அது தொடர்பில் ஆராயப்பட்டிருந்தது. 441 ஏக்கர் விஸ்தீரணமுடைய வட்டக்கச்சி அரசினர் விவசாயப் பண்ணையின் 410 ஏக்கர் காணி தற்போதும் இராணுவத்தின் வசமுள்ளது. இதனை விவசாயத் திணைக்களத்திடம் கையளிக்கும் பட்சத்தில் இந்த மாவட்டத்தின் நூற்றுக்கணகானோருக்கான வேலைவாய்ப்பை ஏற்படுத்த முடியும் என்பதால் பொதுப் பயன்பாட்டு தேவைகளுக்குரிய காணிகளை இராணுவத்திடமிருந்து விடுவிக்க உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் மக்களின் இயல்பு வாழ்வைப் பாதிக்கும் வகையில் அமைவிடத்தைக் கொண்டுள்ள கிளிநொச்சி மாவட்டத்தில் பொதுப்பயன்பாட்டு நிறுவனங்களை அண்மித்தும், பொதுமக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும் வகையிலும் அமைக்கப்பட்டுள்ள மதுபானசாலைகளை மூடுவதென்ற தீர்மானத்தை நிறைவேற்றி அதன் தொடர் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டுமெனவும் சிறிதரன் எம்.பி. கோரியிருந் தமை குறிப்பிடத்தக்கது.

## ஹபரணை...

25 ஆம் திகதி இரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது என விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

சடலமாக மீட்கப்பட்டவர் 64 வயதுடைய நபர். கம்பஹா பகுதியை வசிப்பிடமாகக் கொண்டவர் என அடையாளம் காணப்பட்டுள்ளபோதிலும் மரணம் சம்பந்தமான எந்தவித தகவல்களும் இதுவரையில் கண்டறியப்படவில்லையென விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார் தெரிவித்தனர்.

காட்டுக்குள் இருந்து தீச்சுவாலை வருவதாக வீதியில் சென்று கொண்டிருந்த நபர் ஒருவர் பொலிஸாருக்கு வழங்கிய தகவல் ஒன்றின் அடிப்படையில் சம்பவ இடத்துக்கு விரைந்த மின்னேரிய பொலிஸாரும் தீயணைப்புப் படையினரும் இணைந்து எரிந்து கொண்டிருந்த கெப் வண்டியின் தீயை முழுமையாக கட்டுப்படுத்தினர். பின்னர் அங்கு வருகைதந்த ஹிங்குராக்கொட நீதவானால் ஆரம்பக்கட்ட விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் பிரேத பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக சடலம் பொலனறுவை பொது வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

தீப்பரவல் குறித்து அறிந்துகொள்ள அரச பகுப்பாய்வுப் பிரிவினரை சம்பவ இடத்துக்கு அழைத்துவரவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மின்னேரிய பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் வசந்த உள்ளிட்ட பொலிஸ் குழுவினர் மேற்கொண்டுவருகின்றனர்.

## போக்குவரத்து...

ஒளியைப் பிரதிபலிக்கும் ஒளிரும் மேலங்கி மற்றும் ஒளிரும் கையுறை ஆகியவற்றை அவர் அணிந்திருக்க வேண்டும்.

அத்துடன் வாகனங்களை நிறுத்துவதற்காக பொலிஸ் நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ள சிவப்பு நிற மின்விளக்குகளையே முடிந்தவரையில் பயன்படுத்த வேண்டுமென குறித்த அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இரவுநேரக் கடமையில் ஈடுபடுத்தப்படும் அதிகாரிகள் அவ்வாறு செயற்படுகிறார்களா என்பது தொடர்பில் தலைமையக பொலிஸ் பரிசோதகர்கள், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் மற்றும் போக்குவரத்து பொறுப்பதிகாரிகளால் தொடர்ச்சியாக மேற்பார்வை செய்யப்பட வேண்டுமெனவும் பதில் பொலிஸ் மா அதிபரால் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

வாகனப் போக்குவரத்து கடமையில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள் இரவு வேளைகளில் வாகனங்களை நிறுத்தும்போது பல சந்தர்ப்பங்களில் பல்வேறு வகையான மின்விளக்குகளை பயன்படுத்துகின்றமையால் அவை சாரதிகளுக்கு இடையூறை ஏற்படுத்துகின்றமை காரணமாக அவர்களுக்கு வாகனத்தை கையாளவும் கட்டுப்படுத்தவும் கடினமாக இருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன் காரணமாக விபத்துகள் இடம்பெறும் வாய்ப்பு காணப்படுவதாகவும் ஒளியைப் பிரதிபலிக்கும் மேலங்கியை அணியாமையால் அதிகாரிகள் விபத்துக்குள்ளாகும் சந்தர்ப்பங்கள் காணப்படுவதாகவும் அவதானிக்கப் பட்டுள்ளமையால் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## ‘13’ விடயத்தில்...

இதுவரையில் நம்பிக்கை வைத்திருக்கக்கூடும். ஆனால், அண்மையில் இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு புதுடில்லி சென்ற ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுடன் பேச்சுவார்த்தைகளை நடத்திய பிறகு அவருடன் கூட்டாக நடத்திய செய்தியாளர்கள் சந்திப்பில் இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி 13ஆவது திருத்தத்தை பற்றி எதையுமே கூறுவதை தவிர்த்தார். இதன் மூலமாக கூறப்பட்ட செய்தியை தமிழ்க்கட்சிகள் விளங்கிக் கொண்டிருக்கின்றனவோ தெரியவில்லை என்றும் அந்தப் பத்திரிகையாளர் தனது பதிவில் குறிப்பிட்டிருந்தார்.

கஜேந்திரகுமார் தனது பதிவில் மேலும் கூறியிருப்பதாவது,

தமிழ் மக்களின் சார்பிலேயே இந்திய - இலங்கை சமாதான உடன்படிக்கையில் இந்தியா கைச்சாத்திட்டது என்பது முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியதாகும். சமாதான உடன்படிக்கையில் தமிழர்கள் நம்பிக்கை வைத்திருக்கும் வரை தமிழ் மக்கள் சார்பில் தலையீடு செய்வதற்கான கடமைப்பாடு இந்தியாவுக்கு உண்டு என்று நான் நினைக்கிறேன்.

ஆனால், இன்றைய சூழ்நிலையில் சமாதான உடன்படிக்கை பொருத்தமற்றது என்று இந்தியாவே உணருமானால், அது முற்றுமுழுதாக வேறு விடயம். நாங்கள் விரைவாக சிறந்த ஒரு தெரிவைக் கண்டறிய முடியும்.

ஒற்றையாட்சி அரசின் கீழ் எந்த அதிகாரப் பரவலாக்கமும் சாத்தியமில்லை என்று நீதிமன்றங்கள் திரும்பத்திரும்ப கூறியிருக்கும்போது 13ஆவது திருத்தத்தின் நடைமுறைப்படுத்தல் எவ்வாறு நடக்கமுடியும்? அதனால் 13ஆவது திருத்தம் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வின் தொடக்கப்புள்ளியாகக் கூட ஒருபோதும் இருக்கமுடியாது.

## தினசரி பலாபலன்கள்

### குரோதி வருடம் மார்கழி மாதம் 12ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**மேஷம்** வீணான மனக்கவலைகளைவிட்டு அமைதியுடன் இருங்கள். பயணங்களை குறைத்துக்கொள்வது நல்லது.

**ரிஷபம்** சுய தொழில்மூலம் நன்மைகள் இலாபங்கள் உண்டு. உடல், மனநோய்களால் சற்று தொந்தரவுகள் உண்டு.

**மிதுனம்** தடைப்பட்டிருந்த பயணத்தால் நன்மைகளை அடைவீர்கள்.மனதை மகிழ்விக்கும் பல சம்பவங்கள் நடந்தேறும்.

**கடகம்** யாரையும் நம்பி புதிய தொழில் வியாபாரங்களில் இறங்க வேண்டாம். வாகனப் பயணங்களில் கவனம் வேண்டும்.

**சிம்மம்** உங்கள் தேவைக்காக பணம் கிடைக்கும். மனத்துணிவுடன் உங்கள் காரியங்களில் வெற்றிகொள்வீர்கள்.

**கன்னி** யாருக்கும் வாக்களிக்காதீர்கள். கடன் கொடுப்பது, பெறுவது சில பிரச்சினைகளை ஏற்படுத்தும்.எச்சரிக்கை வேண்டும்.

**துலாம்** மனதில் ஒருவித பய உணர்வு படபடப்பு தோன்றும். வீண் டென்ஷன் வேண்டாம். பொறுமையாக இருங்கள்.

**விருச்சிகம்** தேவையற்ற பயணங்களையும் செலவுகளையும் குறைத்துக்கொள்ளுங்கள். வீண் டென்ஷன் வேண்டாம்.

**தனுசு** தொழில் வியாபார அதிர்ஷ்டங்களை அடைவீர்கள். நினைத்த காரியத்தை வெற்றியுடன் நிறைவேற்றுவீர்கள்.

**மகரம்** நீங்கள் தொழிலில் எதிர்பார்த்த நன்மைகள், உயர்வுகள் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டு.

**கும்பம்** இன்று உங்கள் உழைப்புக்கு முக்கியத்துவம் கொடுக்காவிட்டால் பொருளாதாரச் சிக்கல்களை சந்திப்பீர்கள்.

**மீனம்** எதற்கும் அவசரம் வேண்டாம். மௌனம் காப்பது நல்லது. தேவையற்ற டென்ஷனால் மனதையும் உடலையும் கெடுத்துக் கொள்ளாதீர்கள்.

**திதி:** துவாதசி பி.இ.2.26 வரை பின் திரயோதசி
**நட்சத்திரம்:** விசாகம் மு.இ.8.28 வரை பின் அனுஷம்
**பிறை:** தேய்பிறை
**யோகம்:** அமிர்த யோகம் மு.இ.8.28 வரை பின் மரண யோகம்
**வார சூலை:** மேற்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது
**நல்ல நேரம்:** காலை 6.20 – 9.20 மணி வரை காலை 10.20 – 10.20 மணி வரை, பகல் 1.20 – 3.20 மணி வரை, மாலை 5.20 – 6.20 மணி வரை
**ராகு காலம்:** 10.50 – 12.20 மணி வரை
**எமகண்டம்:** 3.20 – 4.20 மணி வரை
**குளிகை :** 7.50 – 9.20 மணி வரை
**சந்திராஷ்டமம்:** மீன-மேஷ ராசியினர் எச்சரிக்கையாக செயற்படவும் (பிற்பகல் 1.57 வரை மீன ராசியினருக்கு)

**அதிர்ஷ்ட தாராபலனுடைய நட்சத்திரங்கள்**
**இன்று முன்னிரவு 8.28 மணி வரை**
பரணி, ரோஹிணி, திருவாதிரை, பூசம், ஆயிலியம், பூரம், அஸ்தம், சுவாதி, அனுஷம், கேட்டை, பூராடம், திருவோணம், சதயம், உத்திரட்டாதி, ரேவதி
**இன்று முன்னிரவு 8.28 மணிக்கு மேல்**
அஸ்வினி, கார்த்திகை, மிருகசீரிடம், புனர்பூசம், ஆயிலியம், மகம், உத்திரம், சித்திரை, விசாகம், கேட்டை, மூலம், உத்திராடம், அவிட்டம், பூரட்டாதி, ரேவதி

**போன்ற நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கும், தொழில், வியாபார இலாபங்கள், கல்விச் சிறப்பு, திடீர் தன அதிர்ஷ்டம், உடல் ஆரோக்கியம், தெய்வ அனுக்கிரகம் அனைத்தும் சித்திக்கும். அதிர்ஷ்டம், சுகம் உண்டு.**



**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்) ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி :
077-0525325
078-6759739

# அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி வவுனியா நகர்ப்புற ஆசிரியர்களுக்கு இடமாற்றம்

## கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென்கிறார் ஜெகதீஸ்வரன் எம்.பி.

*சிவகுமார் திவியா*

''வவுனியா நகர்ப்புற ஆசிரியர்களுக்கு அரசியல் செல்வாக்கின் ஊடாக இடமாற்றங்கள் வழங்கப்படுகின்றன. எதிர்வரும் காலங்களில் இது தொடர்பாக நாம் கடுமையான நடவடிக்கைகளை எடுக்கவேண்டி வரும்'' - என தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.



வவுனியா, செட்டிகுளத்தில் நேற்று (26) இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

செட்டிகுளம் பிரதேசத்தில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றது. நகர்ப்புறப் பாடசாலைகள் பலவற்றில் மேலதிகமாக பல ஆசிரியர்கள் உள்ளனர். ஏன் நகர்ப்புறப் பகுதியிலுள்ள ஆசிரியர்களைப் பின்தங்கிய பிரதேசத்துக்கு அனுப்ப முடியாமல் உள்ளது. செட்டிகுளம் பிரதேசத்தில் எட்டு வருடங்களாக கடமையாற்றிய சில ஆசிரியர்களுக்கு இன்னும் இடமாற்றம் வழங்கப்படாதுள்ளது. ஆனால், நகர்ப்புறப் பாடசாலைகளில் குறிப்பிட்ட சில ஆசிரியர்கள் நகர்ப்புறப் பாடசாலைகளுக்கே சுழற்சி முறையில் இடமாற்றமாகிச் செல்கின்றனர்.

ஏன் அந்த ஆசிரியர்களை தூரப் பிரதேசங்களுக்கு அனுப்பக் கூடாது. தொடர்ச்சியாக தூரப் பிரதேசத்தில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு ஏன் விமோசனம் கொடுக்கக் கூடாது. இங்கு கூடுதலான அதிகாரிகள் நகர்ப்புறத்தில் இருக்கும் ஆசிரியர்களைக் காப்பாற்றி செல்வாக்கைப் பயன்படுத்தி இடமாற்றங்களை வழங்குகின்றனர். எதிர்வரும் காலங்களில் இது தொடர்பாக நாம் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டி வரும்.

ஜனவரி 07ஆம் திகதி வவுனியா தெற்கு வலயத்தின் உள்ளக இடமாற்றம் இடம்பெறவிருக்கின்றது. அதில் இது தொடர்பில் கவனஞ்செலுத்தி சரியான முறையில் இடம்பெற வேண்டும். செட்டிகுளம் கோட்டத்தில் பாரிய ஆசிரியர் தட்டுப்பாடு நிலவுகின்றது. நகர்ப்புறத்தில் தொடர்ந்தும் பணியாற்றும் ஆசிரியர்களைக்கொண்டு அந்த பற்றாக்குறையை நிரப்ப வேண்டுமெனக் கேட்கின்றேன். அத்துடன், இடமாற்றம் தொடர்பான விடயங்களையும் எம்மிடம் சமர்ப்பிக்குமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

வவுனியா தெற்கு வலயத்தில் ஆசிரியர் பற்றாக்குறை தொடர்பான விபரத்தை தரவேண்டும். புதிதாக ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளிலிருந்து வெளியேறியவர்களுக்கு நியமனம் வழங்கப்படவுள்ளது.

நாம் வடக்கு மாகாண ஆளுநருடனும் கல்வி அமைச்சின் செயலாளருடனும் பேசி இங்குள்ள ஆசிரியர் பறறாக்குறையை நிரப்ப முடியும் எனவும் தெரிவித்தார்.

# பொருளாதார நிலைப்படுத்தல் செயற்பாடுகள் தொடர்பான ஊடகவியலாளர் சந்திப்பு

பொருளாதார நிலைப்படுத்தல் செயற்பாடுகள் மற்றும் மக்களுக்கான உத்தேச நிவாரணப் பொதிகள் தொடர்பான ஊடகவியலாளர் சந்திப்பொன்று ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (26) இடம்பெற்றது.




தொழில் அமைச்சர், பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ, நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும ஆகியோர் இந்த ஊடகச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

இதன்போது வெளியிடப்பட்ட பொருளாதார ஸ்திரப்படுத்தல் செயல்முறை மற்றும் மக்களுக்கான நிவாரணப் பொதிகள் தொடர்பான ஊடக அறிக்கை:

***பொருளாதார ஸ்திரத்தன்மை***

முன்னைய ஆட்சிகள் உருவாக்கிய படுகுழியிலிருந்து நாட்டை மீட்டெடுக்க, பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவது முக்கியமானது.

சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டம் மற்றும் அதனுடன் தொடர்புடைய கடன் ஆகியவை நிலைத்தன்மை பகுப்பாய்வுக்கேற்ப மறுசீரமைப்பு செயல்முறை மூலம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. கடன் மறுசீரமைப்பு செயல்முறையின் தாமதிப்பு மற்றும் கடினமான தன்மை காரணமாக, நாடு மேலதிகச் செலவுகளைச் செய்ய வேண்டியிருந்ததுடன், மக்கள் மீதான அதிக சுமை அதிகப்படுத்தப்பட்டிருந்தது.

***கடன் மறுசீரமைப்பு***

இது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மறுசீரமைப்பை உள்ளடக்கியுள்ளது. உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு 2023 ஜூலை மாதமளவில் நிறைவுசெய்யப்பட்டுள்ளது. வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பில் உள்ளடங்கும் பலதரப்பு கடன் மறுசீரமைப்பு பல்வேறு அடிப்படைகள் மற்றும் தர்க்கங்களுக்கமைய கடன் வழங்குநர்களால் நிராகரிக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள உத்தியோகபூர்வ இருதரப்பு கடன் மற்றும் தனியார் சர்வதேச பிணைமுறிகள் (ISB) என்பன வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பில் உள்ளடங்கும்.

***இருதரப்புக் கடன்***

17 நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரான்ஸ், இந்தியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் இணைத் தலைமைத்துவம் வகிக்கும் உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்கள் குழு (OCC), சீனா எக்சிம் வங்கி, சீனா அபிவிருத்தி வங்கி, ஏனைய உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்களான குவைத், சவூதி அரேபியா, ஈரான், பாகிஸ்தான் மற்றும் ஏனைய வணிக கடன் வழங்குநர்களுடன் இணைந்து இருதரப்பு கடன் தொடர்பான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

உத்தியோகபூர்வ கடன் வழங்குநர் குழு 2024 ஜூன் மாதத்தில் உரிய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டுள்ளதுடன், குறித்த தீர்வுகளின் (CoT) ஒப்பீட்டு நிலையை உறுதிசெய்து, இணக்கம் காணப்பட்ட கட்டமைப்புக்குள் சீனாவுடனான கடன் 2023 ஒக்டோபர் மாதத்துக்குள் மறுசீரமைக்கப்பட்டிருந்தது. ஏனைய உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்களான குவைத், சவூதி அரேபியா, ஈரான், பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகளுடனான கடன் அண்ணளவாக 300 டொலர் மில்லியன்களாக காணப்படுவதுடன், இது ஏனைய முழுக் கடன் மறுசீரமைப்பு செய்தலில்1% ஆகக் காணப்படுகிறது. ஏனைய அனைத்து இருதரப்பு கடன் வழங்குநர்களும் இணங்கிய கட்டமைப்புக்குள் மறுசீரைப்புச் செய்ய தற்போதும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

***சர்வதேச பிணைமுறி கடன் வழங்குநர்கள்***

மிகவும் தாமதமான சர்வதேச பிணைமுறி கடன், மறுசீரமைப்பு ஒப்பந்தங்கள், இணக்கமின்மை, முன்மொழிவுகளை மாற்றுதல், DSA மற்றும் சர்வதேச நாணய நிதிய உடன்படிக்கைகளுக்கு இசைவாக மாற்றுதல் உள்ளிட்ட பல கட்ட பேச்சுவார்த்தைகளைக் கடந்துள்ளது.

இறுதியாக 2024 செப்டெம்பர் 19ஆம் திகதி கொள்கை அடிப்படையில் (AIP) ஜனாதிபதித் தேர்தலுக்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் இணக்கம் காணப்பட்டது.

# போதை மாத்திரைகளுடன் நுவரெலியாவில் ஒருவர் கைது

*செ.திவாகரன்*

நுவரெலியா, ஹாவாஎலிய பகுதியில் சட்டவிரோத போதை மாத்திரைகளுடன் நேற்று (26) ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.



நுவரெலியா மாவட்ட பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் பொலிஸ் பரிசோதகர் மேனன் தலைமையிலான பொலிஸ் குழுவினர் குறித்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.இதன்போது 34 வயதுடைய ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

கைதுசெய்யப்பட்ட குறித்த நபரிடமிருந்து கஞ்சா கலவை செய்யப்பட்ட 300 போதை மாத்திரைகள் பொதிசெய்யப்பட்டிருந்த நிலையில், மீட்கப்பட்டுள்ளன.

அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமாக நடத்திவந்த ஆயுர்வேத மருந்தக விற்பனை நிலையம் ஒன்றிலே குறித்த போதை மாத்திரைகளை விற்பனை செய்து வந்துள்ளமை தெரியவந்துள்ளது.

கைதுசெய்யப்பட்டுள்ள நபர் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில், மேலதிக விசாரணைகளின் பின்னர் சந்தேக நபரை நுவரெலியா நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.



தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2024 டிசம்பர் 27ஆம் திகதி, வெள்ளிக்கிழமை

# இறுக்கப்படவேண்டிய சட்டங்கள்!

கோழி இறைச்சியை இலஞ்சமாக பெற்றவர்கள் கைது என்ற செய்தி நேற்று ஊடகங்கள் பலவற்றில் வெளியாகியிருந்தது. அந்த செய்தி பின்வருமாறு அமைந்திருந்தது.

**ஒரு கிலோ கோழி இறைச்சியை இலஞ்சமாக வாங்கிய வருமான வரி உத்தியோகத்தரும் களப் பணியாளரும் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர்.**

**கொஸ்கம பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் செய்த முறைப்பாட்டுக்கு அமைய சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். முறைப்பாட்டாளருக்கு சொந்தமான கடையின் அடுத்த வருடத்துக்கான வர்த்தக அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்குத் தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காக குறித்த சந்தேக நபர்கள் 1,170 ரூபா பெறுமதியான ஒரு கிலோ கோழி இறைச்சியை இலஞ்சமாக கோரியதாக தெரிவிக்கப்படுகிறது.**

**விசாரணையின் போது, முறைப்பாடு செய்த வர்த்தகரின் கடைக்கு முன்பாக சந்தேக நபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர். வேவெல்தெனிய உப அலுவலகத்தில் கடமையாற்றும் வருமான வரி உத்தியோகத்தர் ஒருவரும் மீரிகம பிரதேச சபையின் வீதிப் பிரிவில் கடமையாற்றிய பணியாளர் ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.**

**சந்தேக நபர்கள் அத்தனகல்ல நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதுடன், இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது.** என்று அந்த செய்தி வெளியாகியுள்ளது.

நாட்டில் இலஞ்சம் பெறும் விவகாரம் எந்தளவு தூரம் புரையோடிப்போயிருக்கிறது என்பதற்கு இது சிறந்த உதாரணம். யாரும் இதனை சாதாரண ஒரு விடயமாக கருத்திற்கொள்ளக் கூடும். சாதாரண கோழி இறைச்சியை தானே பெற்றுள்ளனர் என்று நியாயப்படுத்தக் கூடும். ஆனால் விடயம் அதுவல்ல. ஏதாவது ஒரு விடயத்தை செய்துகொடுப்பதற்கு ஏதாவது ஒன்றை பெற்றாக வேண்டும் என்ற நியாயப்பாடு சமூகத்தில் எந்தளவு தூரம் ஆழப்பதிந்துள்ளது என்பதையே இது காட்டுகிறது.

இலஞ்சம் என்பது,அரசு ஊழியர் ஒருவர் எந்தக் கடமைகளை செய்வதற்காகப் பணியமர்த்தப்பட்டு, அதற்கான ஊதியத்தைப் பெற்று வருகிறாரோ அதே கடமைகளைச் செய்வதற்கு பொதுமக்களின் சொந்தப் பணத்தைத் தருமாறு கேட்டுப் பெறுவதாகும்.

ஊழல் என்பது, அரசின் திட்டங்களை அமுல் செய்யும் பொறுப்பில் இருப்போர், அத்திட்டத்தின் கூறுகளில் தரத்தைக் குறைத்து அதன் மூலம் அரசு ஒதுக்கியுள்ள நிதியின் ஒருபகுதியை தமக்கென ஒதுக்கிக் கொள்வதாகும்.

முன்னதில்,பொது மக்களின் சொந்த உழைப்பில் ஈட்டிய பணம், இலஞ்சம் கோரும் அதிகாரிக்கு செல்கிறது.

இரண்டாவது நிகழ்வில், அரசுத் திட்டங்களுக்கான நிதியின் ஒருபகுதி தனிமனிதர்களுக்கு போவதுடன், அரசுத் திட்டங்களின் தரமும் பாழாகி விடுகிறது. இந்த இரண்டையும் தடுக்க கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டியது அவசியமாகும்.

ஊழலும் இலஞ்சமும் இல்லாத நாடென்று ஒன்று கிடையாது. எல்லா நாடுகளிலும் திருடர்கள் இருக்கிறார்கள். திருடர்கள் தப்பிவிடுகிறார்கள் என்று சொல்வது வேறு.

ஆனால் திருடர்களே நாட்டை ஆள்கிறார்கள், திருடர்களே நிருவாகத்தைக் கவனிக்கிறார்கள் என்றெல்லாம் சொல்வது வேறு. மற்றைய நாடுகளிலும் சட்டத்தை மீறுபவர்கள் இருக்கிறார்கள். ஆனால் அரசியல் பீடங்களும் அதிகார மையங்களும் அதனை எப்படிக் கையாள்கின்றன என்பதைப் பொறுத்தே அவற்றின் வேர்கள் சமுதாயத்தை முற்றுமாகச் சுற்றி வலை பின்னி அதனை மீளா மயக்கத்தில் போட்டுவிடுமா இல்லையா என்பது தீர்மானிக்கப்படுகிறது. தேவைகளை நோக்கி வளங்களைத் திருப்பும் எந்தப் பொருளாதார ஒழுங்கும் ஊழலால் மாசுபடத்தான் செய்கிறது. ஆனால் அதனைத் தூசு தட்ட முடியுமா என்பதே நம் கேள்வி.

ஊழலில் ஒரு நடைமுறையாகி விட்ட பிறகு அங்கே இலஞ்சம் கொடுப்பவர் குற்றவாளியா அல்லது வாங்குபவர் குற்றவாளியா என்று சொல்லி விட முடியாது.

ஏனென்றால் அது ஒரு அர்த்தமற்ற விவாதமாகி விடுகிறது. கல்வியறிவின்மை,வறுமை, தேவைகளின் தாகம், கட்டற்ற சுயநல மனப்பான்மை இவையெல்லாம் தத்தம் தாக்கங்களை அங்கே அந்த இலஞ்ச-ஊழற் பொருளாதாரத்தின் மீது தருகின்றன. இவற்றின் நெடுங்கால விளைவுகள் பாரதூரமானவை என்று தெரிந்தவர்கள் இருக்கிறார்கள். ஆனால் கவலைப்படுபவர்கள் யாருமில்லை என்பது தான் உண்மை.

இவற்றைக் கட்டுப்படுத்த ஏதோ ஒரு வழி இருக்க வேண்டும். அந்த ஒரு வழி தான் தெற்காசிய நாடுகளின் நிர்வாக ஒழுங்குகளிற் தெளிவாக இல்லை. இது ஒரு கலாசாரச் சீரழிவா இல்லையா என்பது தான் நாம் ஆராய வேண்டிய அடிப்படைக் கேள்வி. இங்கே மேற்கத்தேய நாடுகளுக்கும் தெற்காசிய நாடுகளுக்கும் இடையில் உள்ள வேறுபாடென்னவெனில் மேற்கு நாடுகளில் சட்டம் தனது வேலையைச் செய்தே தீரும்.

இங்கே அப்படியல்ல. அரசியற் சித்தாந்தமும் ஆட்சியும் நீதி பரிபாலனம், நிருவாகத் துறை, சட்டவாக்கற் துறை என்பன ஒன்றிலிருந்து மற்றது தீர்க்கமாக வேறுபடுத்தப்பட்டுச் சுதந்திரமாக இயங்கும்போது எங்கெங்கே ஒழுங்குமுறை தவறுகிறதோ அங்கெல்லாம் சட்டம் தனது வேலையைச் செய்யும். எங்கே சட்டம் தனது வேலையைச் செய்கிறதோ அங்கே பயம் ஒரு தடுப்பூசியாக இருக்கும். சட்டங்களை இறுக்க வேண்டும் அரசு.




# எதிர்காலம் நல்லகாலம்!

***எதிர்காலம் குறித்த எதிர்பார்ப்பில் எப்போதும் நம்பிக்கையுடன் காத்திருக்கும் இனிமையான வாசகர்களே! வணக்கம்.***

கடந்த காலம், நிகழ் காலம், எதிர்காலம் என்று காலங்களை மூன்று நிலைகளில் பிரிக்கலாம். கடந்த காலம் என்பது நாம் கடந்து வந்த காலம் அல்லது நம்மைக் கடந்து போன காலம் என்று குறிப்பிடலாம். இதனை இறந்த காலம் என்றும் கூறுவர். அதாவது, இறந்துபோன காலம். அதனை மீண்டும் உயிர்ப்பித்துக் கொண்டுவர முடியாது. நாம் செய்த தவறுகள், நாம் சாதித்த சாதனைகள், நாம் சந்தித்த சோதனைகள், நாம் அனுபவித்த இன்பங்கள், நாம் அனுபவித்த துன்பங்கள்... என ஒட்டு மொத்தமாக நாம் வாழ்ந்த வாழ்க்கையின் கூட்டுக் கலவையாகக் கடந்தகாலம் திகழ்கிறது. கடந்த காலத்தைத் திரும்ப நினைத்துப் பார்க்கத்தான் முடியுமேயொழிய, அதற்குள் சென்று திருந்திய வாழ்க்கையை வாழ்வோமென்று திரும்பப் புகவே முடியாது.

நிகழ்காலம் என்பது, இப்போது நிகழ்ந்து கொண்டிருக்கிற காலம். நம் கண்முன்னே நாம் வாழ்ந்து கொண்டிருக்கிற காலம். நேற்றுப் போட்டு வைத்த திட்டங்கள் படி இன்று எல்லாம் சரியாகப் போய்க் கொண்டிருந்தால் நிகழ்காலம் மகிழ்ச்சிமயம் என்று மகிழலாம். நினைத்தது ஒன்றாகவும் இன்று நடப்பது வேறாகவும் அமையும் பட்சத்தில் நிகழ்காலம் துயர இசைக் காலமாகவே கழிந்துகொண்டிருக்கும்.

நேற்றுவரை கையிருப்பில் இருந்த மகிழ்வும் செல்வமும் அதே போலவே இன்று தொடர்ந்தாலோ அல்லது அதற்கு மேலான நிலைகளில் வளர்ச்சிநிலை கண்டாலோ நிகழ்பொழுது சிறப்பான பொழுது என்று போற்றப்படும். அல்லது நிலைமை தலைகீழாக மாறித் தோல்விகளே தொடர்ந்துவந்து கொட்டிக் கொண்டிருந்தால் நிகழ் காலம் நம்மைச் சோர்வடைய வைத்துத் தளர்வடையச் செய்யலாம். அல்லது நடந்தவரை தோல்விகள் போதும், இனியாவது விழித்துக் கொள்வோம் என்று புதிய நம்பிக்கைகளோடு கிளம்பினால் அதே நிகழ்காலம் நம்மைக் கிளர்வடையவும் செய்யும்.

எதிர்காலம் என்பது நாம் எதிர்கொள்ள இருக்கிற காலம். நாம் ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருக்கிற காலமும்கூட. எப்போதுமே யாருமே சந்தித்திராத, சந்தித்து அனுபவித்துப் பார்த்திராத ஒரு கற்பனைக் காலம் அது. அங்கே நிகழமுடியாத வியப்புகள் நிகழ்வதற்கும் வாய்ப்புகள் உள்ளன. தோல்விகளும் மறுபக்கத்தில் உள்ளன. என்றாலும், எதிர்காலத்தின் மீதான நம்பிக்கைகளும் இலட்சியங்களும் அபரிமிதமான வெற்றிகளை நோக்கிய எதிர்பார்ப்புகளாகவே இருக்கின்றன.

''நேற்று என்பது உடைந்த பானை. இன்று என்பது கையில் உள்ள வீணை. நாளை என்பது மதில்மேல் பூனை'' என்பது மூன்று காலங்கள் குறித்த ஓர் அழகான பழமொழி. நேற்று என்பது நம்மால் உருவாக்கப்பட்ட அழகான பானையாக இருக்கலாம். அந்தப் பானை பல பயனுள்ள செயல்களுக்குப் பயன்பட்டும் இருக்கலாம். ஆனால், இன்றோ அது பயன்பாட்டுக்கு எந்த வகையிலும் ஒத்துவராத உடைந்த பானையாக மாறிவிட்டது. கடந்த காலம் நமக்கு நினைவுகளாகச் சில வழிமுறைகளைக் கற்பிக்கலாமேயொழிய, இன்றைய நமது செயற்பாடுகள் நிகழ்காலத்துக்கு ஏற்புடையதாக இருக்கும் வகையில் அது உதவ முடியாது. அதனால் தான் இன்றைய நிகழ்காலத்தைக் கையிலுள்ள வீணை என்று கூறுகிறார்கள். வாசிக்க முடிந்த அளவுக்கு வாழ்வில் இனிமை சேர நிகழ்காலத்தை நாம் வாழ்ந்து அனுபவிக்க வேண்டும்.

எதிர்காலம் என்பது மதில்மேல் பூனை என்கிற வாசகம் ஆழ்ந்த சிந்தனைக்கு உட்படுத்தப்பட வேண்டியது. மதில்மேல் இருக்கிற பூனை எப்பக்கம் வேண்டுமாயினும் தாவக்கூடிய தன்மை வாய்ந்தது. நம்முடைய எதிர்காலமும் அத்தகையதே. நாம் நம் அறிவையும் கற்பனையையும் கொண்டு அறிவியலோடு கூடிய அழகியலாய் நமது எதிர்காலம் குறித்துப் பல கற்பனைகளை உருவாக்கி வைத்திருக்கலாம்.

ஆனால், அவை பலன் தருமா - தராதா என்பது மதில்மேல் பூனை நிலைமைதான். எதிர்காலத்தின் பலன் வெற்றியாகவும் இருக்கலாம்; தோல்வியாகவும் அமையலாம். நிகழப்போகிற காலத்தில் மட்டுமே அதன் இயல்புத் தன்மையை அறியமுடியும்.

பொதுவாகவே எதிர்காலம் குறித்த கணிப்பு எல்லோருக்கும் நேர்முறையானதாகவும் நம்பிக்கையானதாகவும் இருக்க வேண்டும். ஆனால், மனிதன் தனது கடந்த கால வாழ்வில் சந்தித்திருக்கிற தொடர் துன்பங்களும் நிகழ்காலத்திலும் அவற்றிலிருந்து மீடேறி வரமுடியாமல் தவிக்கின்ற தோல்வி அனுபவங்களும் அவனுக்கு எதிர்காலம் குறித்து நம்பிக்கையூட்டாமல் அச்சமூட்டுவதாகவே அமைந்துவிடுகின்றன.

கடந்த காலத்திலும் பெரியதாக ஒன்றும் சாதிக்க முடியவில்லை. நிகழ் காலத்திலும் சொல்லிக்கொள்ளும்படி நினைத்தது எதுவும் நினைத்தபடி நடக்கவில்லையென்றால், எதிர்காலம் குறித்து மகிழ்வதற்குப் பதில் அச்சப்படவே எல்லோரும் செய்வார்கள். ஒவ்வொரு மனிதனும் கடந்தகாலம் மற்றும் நிகழ்காலம் குறித்து என்ன மனநிலையிலும் இருந்துவிட்டுப் போகட்டும். ஆனால், எதிர்கொள்ளப்போகிற எதிர்காலம் குறித்து இரண்டு விதமான மனநிலையில் மட்டுமே அவன் செயற்படமுடியும். ஒன்று எதிர்காலம் என்ன ஆகுமோ என்று அச்சப்படுவது; மற்றொன்று என்ன நடந்தாலும் நடக்கட்டும் என்று நம்பிக்கையோடு துணிந்து எதிர்கொள்வது.

அச்சப்படுவதும், துணிந்து நிற்பதுமாகிய இரண்டுவித மனோபாவங்களுமே ஒருவகையில் எதிர்காலம் குறித்த நேர்முறை நிகழ்வுகளுக்கு வழி திறப்பவையாகவே அமையும். எப்படியென்றால், நிகழ்காலம் தான் தோல்விமயமாக இருக்கிறதே, எதிர்காலம் என்னாகுமோ என்று அச்சம் வந்து பற்றிக்கொண்டால், அந்த அச்சத்தையே மூலதனமாகக் கொண்டு நிகழ்காலத்திலேயே கவனமாகச் செயற்படத் தொடங்கிவிடுவோம். பிறகு வாய்க்கிற எதிர்காலம் நன்மைகளை வழங்குகிற பொற்காலமாகவே அமைந்து விடும்.

மற்றொரு கோணத்தில், கடந்த காலமும் நிகழ்காலமும் கசப்பான அனுபவங்களின் காலமாக அமைந்துவிட்ட பட்சத்தில், எதிர்காலமும் சொல்லிக்கொள்ளும்படி நன்மையானதாக அமையாவிடினும், அதனை நமக்கேற்றபடி, மாற்றியமைத்துக்கொள்ளும் நம்பிக்கையையும் துணிச்சலையும் பெற்றுவிடுகிறோம். அப்படித் துணிச்சலோடு செயற்படத் தொடங்கும்போது எதிர்காலத்தில் எந்தத் துன்பமும் எதிர்த்து நிற்கமுடியாமல் தூள்தூளாகிப் போகும்.

எல்லா மனிதர்களுக்கும் எதிர்காலம் குறித்த ஓர் அழகான கற்பனை உண்டு. அந்த அழகான கற்பனையை நிஜமாக்கிக் காட்டுவதும் வெறும் கனவாக்கிக் கலைத்திடுவதும் நாம் எந்த அளவுக்கு நேர்மையுடனும் உண்மையுடனும் பாடுபடுகிறோம் என்பதைப் பொறுத்தே வாய்க்கும்.

கௌதம புத்தர் வாழ்ந்த காலத்தில் ஒரு பயங்கரக் கொலை, கொள்ளைக்காரன் வாழ்ந்து வந்தான். ஒருநாள் அவன் மனம் திருந்தி துறவறம் மேற்கொள்வதென்று ஆசைப்பட்டான். புத்தரை அவரது மடத்தில் சந்தித்து, பாவமன்னிப்புப் பெற்றுக்கொண்டு சந்நியாசியாகத் துறவு வாழ்க்கையைத் தொடங்குவது என்பது அவனது எண்ணம். நேராகப் புத்தரைச் சந்திக்க அவரது மடத்துக்குச் சென்றான். இவனைப் பற்றி அங்குள்ள சீடர்களுக்கு நன்றாகத் தெரியுமென்பதால் மடத்துக்குள் விட மறுத்துவிட்டார்கள். சற்றும் தளராமல் மடத்தின் சுற்றுச்சுவர் ஏறித்தாவிக் குதித்து மடத்துக்குள் சென்று விட்டான்.

அந்த நேரத்தில் புத்தர் பிச்சைக்காக மடத்துக்கு வெளியே சென்றிருந்தார். மடத்துக்குள் தாவிக்குதித்த கொலைகாரனைச் சீடர்கள் பிடித்தனர். புத்தருக்கு அடுத்த நிலையிலிருந்த சாரிபுத்தனிடம் அவனைக் கொண்டுபோய் நிறுத்தினார்கள். புத்தரைப் பார்த்து தீட்சை பெறுவதற்காக வந்துள்ளேன் என்றான். அவனைப் பார்த்த ஒருசில நொடிகளிலேயே அவனது ஜாதகம் முழுவதையும் மனதால் வாசித்து முடித்து விட்டார் சாரிபுத்தன். அவன் இந்தப்பிறவியில் பல கொலைகளையும் கொள்ளைகளையும் செய்தவன். அதுமட்டுமல்ல, இதுவரை பிறந்த எந்தப் பிறவியிலும் அணுவளவுகூட நல்லவனாக இருந்ததில்லை என்பதைத் தெரிந்துகொண்டார் சாரிபுத்தன்.

''புத்தரை நேருக்கு நேராகத் தரிசிக்கும் தகுதிகூட இந்தத் தீயவனுக்கு இல்லை. புத்தர் வருவதற்குள் இவன் கழுத்தைப் பிடித்து மடத்துக்கு வெளியே தள்ளிவிட்டு வாருங்கள்!''- என்று சீடர்களைப் பார்த்துக் கட்டளையிட்டார் சாரிபுத்தன். ''என்னது? பகவான் புத்தரைப் பார்க்கிற அருகதை கூட எனக்கு இல்லையா? பிறகு எதற்கு நான் உயிரை வைத்துக்கொண்டு இந்த உலகில் இருக்க வேண்டும்?''- என்று கேட்டுவிட்டு அங்கே மடத்தில் இருந்த சுவரில் தன் தலையை மோதி உயிர்விடும் முயற்சியில் ஈடுபடத் தொடங்கினான்.

அப்போது, வெளியில் சென்றிருந்த புத்தர் மடத்துக்குள் வந்துவிட்டார். உயிரை விடுவதற்காகச் சுவரில் மோதிக்கொண்டிருந்த அந்தக் கொடியவனின் தலையைத் தனது கரங்களால் தாங்கிப் பிடித்து அவனது தற்கொலை முயற்சியைத் தடுத்து நிறுத்தினார். நடந்தவற்றைச் சாரிபுத்தன் புத்தருக்கு எடுத்துரைத்தான். ''அந்தக் கொலைகாரனின் இந்தப் பிறவியிலுள்ள கடந்த காலம் மட்டுமல்ல; கடந்த பிறவிகள் அனைத்திலுமே அவன் கொடியவனாகவே இருந்திருக்கிறான். நிகழ்காலத்திலும் அவன் கொடியவன் தான். அவன் இப்போது உங்களிடம் தீட்சை பெற்றாலும் எதிர்காலத்திலும் அவன் தீயவனாகவே வாழ்வானேயொழிய நல்லவனாகத் திருந்தி வாழ வாய்ப்பே கிடையாது''- என்று தனது அனுமானத்தை எடுத்துரைத்தார் சாரிபுத்தன்.

புன்னகைத்தவாறே புத்தர் பேசினார். ''சாரிபுத்தா நீ இந்தக் கொலைகாரனின் இறந்தகாலத்தைப் பற்றியே ஜாதகம் கணித்தாய். இறந்தகாலம் எப்போதும் இறந்தகாலம்தான். அது எதிர்காலம் குறித்த மாற்றங்களுக்கு எந்த விதத்திலும் உதவப் போவதில்லை. இவனை என்னிடம் விடு. ஒரு வாரத்தில் இவனைத் திருந்திய மனிதனாக மாற்றிக் காட்டுகிறேன். வாழ்க்கையில் நல்லவர்களைவிட வெகு சீக்கிரத்தில் கெட்டவர்கள் திருந்தி விடுவார்கள். கடந்தகாலம் எவ்வளவு கொடுமையானதாக இருந்தாலும் திருந்தி நேர்மையுடன் வாழ முயற்சிக்கும் எல்லோருக்கும் எதிர்காலம் நல்ல காலம்தான்''என்று கூறி அவனைச் சந்நியாசி ஆக்கித் தன்னோடு சேர்த்துக்கொண்டார்.

எதிர்காலம் என்பது எழுதப்படாத காகிதம் போன்றது. அதில் நாம் அழகிய சித்திரங்கள் வரையலாம். வரைந்த சித்திரங்களைச் சிதைக்கவும் செய்யலாம். சிலர் எதுவுமே எழுதாமல் வெற்றுத் தாள்களாகவே வைத்திருக்கலாம். மதிப்புடைய அழகிய வாழ்க்கையை வாழ்ந்து சாதனைச் சுவடுகளைப் பதிக்க நினைப்பவர்களுக்கு எதிர்காலம் எப்போதும் ஏற்றம்தரும் காலமாகவே அமையும்.

'அச்சமே கீழ்களது ஆசாரம்' என்று குறிப்பிடும் திருவள்ளுவர் அச்சமின்மையே மேன்மக்களாக வாழத் துடிப்பவர்களின் செயலாயுதம் என்பதை வலியுறுத்துகிறார். அவரே, எண்ணித் துணிக கருமம்! என்று கூறி எச்செயலையும் துணிச்சல் குன்றாத சிந்தனையூக்கத்துடன் எதிர்கொள்ளப் பழகச் சொல்கிறார். எதிர்காலம் குறித்த அச்சம், எல்லோருக்கும் முதலில் தோன்றுவது இயல்பானது. என்றாலும், அந்த அச்சத்தைக் கவனப்படுத்தும் செயல்முறையாக்கித், துணிச்சலை ஆயுதமாக்கி எதிர்கொண்டால் எதிர்காலம் என்றும் நல்ல காலமே!.

***சுந்தர ஆவுடையப்பன்***
***நன்றி - மாலைமலர்***

## இன்றைய நாளில்...

- **1831 – அறிவியலாளர் சார்ள்ஸ் டார்வின், உயிரினங்களின் படிவளர்ச்சிக் கொள்கை பற்றிய ஆய்வுக்காக தென் அமெரிக்கா நோக்கிப் புறப்பட்டார்.**
- **1845 – பிள்ளைப்பேறுக்கு மயக்க மருந்தாக 'ஈதர்' முதல் தடவையாக ஐக்கிய அமெரிக்காவில் ஜோர்ஜியாவில் பயன்படுத்தப்பட்டது.**
- **1864 – இலங்கையில் முதலாவது ரயில் சேவை கொழும்புக்கும் அம்பேபுசைக்குமிடையில் ஆரம்பிக்கப்பட்டது.**
- **1911 – இந்தியாவின் தேசிய கீதமான 'ஜன கண மன' முதன்முதலில் கொல்கத்தா நகரில் நடந்த இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டில் இசைக்கப்பட்டது.**
- **1915 – யாழ்ப்பாணத்தின் முதல் பொது நூலகமான நகுலேசுவரா நூல் நிலையம் கீரிமலையில் திறக்கப்பட்டது.**
- **1956 – தமிழ்நாட்டில் தமிழ் ஆட்சி மொழிச் சட்டம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.**
- **1966 – உலகின் மிகப் பெரும் குகை மெக்சிக்கோவில் கண்டுபிடிக்கப்பட்டது.**
- **1968 – சந்திரனுக்கான முதலாவது மனித விண்வெளிப் பயணக் கப்பலான அப்பலோ-8 வெற்றிகரமாக பசுபிக் கடலில் இறங்கியது.**
- **2000 – யாழ்ப்பாணம், தென்மராட்சி மிருசுவிலில் தமது வீடுகளைப் பார்வையிடச் சென்ற 8 பொதுமக்கள் இலங்கைப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.**
- **2007 – பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோ ராவல்பிண்டியில் தற்கொலைக் குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டார்.**

## நக்கல் நமசிவாயம்

**விண்வெளியில கிறிஸ்மஸ் கொண்டாடி இருக்கிறாங்க.. தைப்பொங்கல் கொண்டாட்டம் ஏதும் அங்க நடந்தால் தான் இருக்குது விளையாட்டு... எங்கே போய் பொங்குறது பாருங்கோ...**



# கௌதாரிமுனையில் மண் அகழ்வுக்குத் தடை: கூட்டத்துக்கு ஊடகர்களுக்கும் அனுமதி மறுப்பு

## கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் தீர்மானம்







**(பு.கஜிந்தன்)**

கௌதாரிமுனையில் மண் அகழ்வுக்கு அனுமதி வழங்கவேண்டாம் என யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுத் தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டமானது கடற்றொழில் அமைச்சர் தலைமையில் நேற்று (26) கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது. இக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஆரம்பத்தில் சுனாமியில் உயிரிழந்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. அதன் பின்னர் தேசியக்கொடி ஏற்றி வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து கூட்டம் ஆரம்பமானது.

இந்த ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில், வடக்கு மாகாண ஆளுநர், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர், பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசத் திணைக்களங்களின் அதிகாரிகள், முப்படையினர், பொலிஸார், சமூகமட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் ஊடகவியலாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த கடற்றொழில் அமைச்சர், ''கௌதாரிமுனையில் மண் அகழ்வுக்கு அனுமதி வழங்க வேண்டாம். மேலும், கௌதாரி முனை ஒரு முக்கியமான பிரதேசம். அந்த இடம் சம்பந்தமாக உங்கள் எல்லோருக்கும் நன்றாக தெரியும். அதனைப் பாதுகாக்க வேண்டிய தேவை உள்ளது. எனவே அனுமதி கொடுக்கப்பட வேண்டாம் என்பது இந்த அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தின் தீர்மானம். மேலும் ஊடகவியலாளர்களுக்கும் பொதுமக்களுக்கும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு அனுமதி இல்லை. இந்த முடிவுக்கு ஏற்ப செயற்பட வேண்டும்'' என்றார்.

இதன்போது குறுக்கிட்ட பாராளுமன்ற உறுப்பினர் இ.அர்ச்சுனா, ''இன்று தீர்மானம் எடுக்கப்பட்டு விட்டது என்பதற்காக இதற்கு முந்தைய நாளான 24ஆம் திகதிக்கு முன்னர் அனுமதி கொடுக்கப்பட்டது போல திகதியிட்டும் அனுமதி கொடுக்கப்படக் கூடாது'' என்றார்.

# வாழ்க்கைப் பாடம்

**ஏ.சீ.அகார் முஹம்மத், முதல்வர், ஜாமிஆ நளீமிய்யா கலாபீடம்**

## அமெரிக்க மஸ்ஜிதொன்றில் நடந்த ஒரு சம்பவம்

*சம்பவத்தைச் சொல்பவர் அந்த மஸ்ஜிதின் இமாம். அவர் பின்வருமாறு சொல்கின்றார்:*

*“ஒரு நாள் நான் மஃறிப் தொழுகையை நிறைவேற்றி ஸலாம் கொடுத்த கையோடு ஒரு கறுப்பின இளைஞன் என்னை நோக்கி விரைந்து வந்தான்.*

*நான் இதற்கு முன்னர் நமது மஸ்ஜிதில் அவனைப் பார்த்ததில்லை. வந்தவன் ஸலாம் சொல்லிவிட்டு தனக்கு சற்று ஒலி வாங்கியைப் பயன்படுத்த அனுமதி தருமாறு கேட்டான்.*

*நான் அனுமதிக்கவே ஒலி வாங்கியை கையில் எடுத்த அவன், அங்கே ஸப்புகளில் அமர்ந்திருந்தவர்களை நோக்கி ஸலாம் சொல்லி விட்டு ஸூறத்துல் பாத்திஹாவை ஒவ்வொரு வசனமாக ஓதலானான்.*

*அவனால் அதை திருத்தமாக ஓத முடியாமல் இருந்தது; திக்கித் திக்கி மிகவும் சிரமத்துடனேயே ஒவ்வோர் ஆயத்தையும் ஓதினான்.*

*ஓதி முடித்து ஒலி வாங்கியை உரிய இடத்தில் வைத்தவன் மஸ்ஜிதின் ஒரு பக்கமாகச் சென்று இரண்டு றக்அத்கள் ஸுன்னத் தொழுது விட்டு அங்கிருந்து புறப்பட்டான்.*

*நானும் அவன் பின்னால் சென்றேன். யார் இந்த இளைஞன், ஸூறத்துல் பாத்திஹாவை ஒழுங்காக ஓதத் தெரியாத போதும் அவன் ஏன் இவ்வளவு சிரமப்பட்டு அதை இங்கு ஓத வேண்டும் என்பன போன்ற கேள்விகள் என் உள்ளத்தில் எழுந்த வண்ணம் இருந்தன. அவனை நெருங்கிய நான் எனது கேள்விகளை அவனிடம் கேட்டேன்.*

*அதற்கு அவன் சொன்ன பதில்:*

*எனது பெயர் லூன்(Loon). நானொரு ராப் பாடகன்(Rapper). இரண்டு நாட்களுக்கு முன்பு தான் இஸ்லாத்தைத் தழுவினேன்.*

*எனது தற்போதைய பெயர் ஆமிர் ஜுனைத். நான் இன்று இஸ்லாம் பற்றிய ஒரு புத்தகம் வாசித்தேன். அதில், நான் சொன்ன ஒரேயொரு வசனம் (ஆயத்) உங்களுக்குக் கிடைத்தாலும் அதனை அடுத்தவர்களுக்கு எடுத்துச் சொல்லுங்கள் என்ற நபி மொழியைப் பார்த்தேன்.*

*எனக்கு இப்போதைக்கு ஸூறத்துல் பாத்திஹா தெரியும்; அதை ஓரளவு ஓதவும் தெரியும்; எனவே இப்போதைக்கு எனக்கு ஏழு வசனங்கள் தெரியுமல்லவா; அதனை நான் பிறருக்கு எடுத்துச் சொல்ல வேண்டுமல்லவா என்று யோசித்தேன். அதனாலேயே இங்கே மக்களுக்கு அதனை ஓதிக் காண்பித்தேன் என்று சொன்னான்.*

*லூன் ஒரு பிரபல ராப் பாடகராக இருந்தவர். 2008 அளவில் இஸ்லாத்தை ஏற்ற இவர் இசைத்துறைக்கு முழுமையாக விடை கொடுத்து விட்டு அழைப்புப் பணிக்காக தன் வாழ்வை அர்ப்பணிக்கத் தீர்மானித்தார். இன்று வரை அவர் அமெரிக்காவில் மிகவும் ஆர்வத்தோடு இறை பணியில் ஈடுபட்டு வருகின்றார். பெருந்தொகையானோர் அவரது பிரசார முயற்சியால் இஸ்லாத்தின் பால் ஈர்க்கப்பட்டு வருகின்றனர்.*

*லூன் போன்றவர்களின் கதைகளை படிக்கும் போதெல்லாம் பின்வரும் அல்குர்ஆன் வசனம் நம்மைப் போன்ற பரம்பரை முஸ்லிம்களின் நினைவுக்கு நிச்சயம் வரும், வர வேண்டும்:*

*“(சத்தியத்தை) நீங்கள் புறக்கணிப்பீர்களாயின் நீங்களல்லாத (வேறு ஒரு) சமூகத்தாரை அவன் உங்களுக்குப் பதிலாகக் கொண்டு வருவான். அவர்கள் உங்களைப் போன்று இருக்கமாட்டார்கள்.” (47:38)*

# அதிவேக நெடுஞ்சாலையில் மின் கம்பித் திருட்டை தடுத்த நிறுத்த விசேட அதிரடிப் படையினர் முயற்சி

## போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு

கட்டுநாயக்க - கொழும்பு அதிவேக நெடுஞ்சாலையில் போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் மின் கம்பிகளை வெட்டுதல் தொடர்பாக அமைச்சுக்கு கிடைக் கப்பெற்றுள்ள முறைப்பாடுகளை கருத்தில்கொண்டு, அதிவேக நெடுஞ்சாலையில் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரை ரோந்து சேவையில் ஈடுபடுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை எடுப்பதாக பொதுமக் கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்தார்.

அதிவேக நெடுஞ்சாலையின் மின்கம்பிகளை வெட்டிச் செல்லும் சந்தர்ப்பங்களில் அந்த திருடர்களுக்கு தண்டனை வழங்கினாலும் எவ்வளவு புதுப்பித்தாலும் திருட்டுச் சம்வங்கள் தொடர்கின்றன. இதேவேளை இரவு நேரங்களில் இடம்பெறும் இந்த திருட்டினால் வீதியைப் பயன்படுத்தும் நபர்களும் அச்சம் கொள்வதாக தெரியவருகின்றது.

இதற்கிணங்கவே இரவு நேரங்களில் ரோந்து சேவையை மேற்கொள்வது தீர்வாக அமையும் என்று நெடுஞ்சாலைகள் அமைச்சு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

அவ்வாறே இந்த வீதியில் இடம்பெறும் விபத்துகளின்போதும் அவற்றை உடனடியாக நீக்குவதற்கு அவசியமான உதவிகளை வழங்குவதற்கும் இந்த அதிரடிப்படையினரின் ஒத்துழைப்பை பெறுவதற்கும் இணக்கம் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# அநுராதபுரம் நகரில் டெங்கு நோய் பரவும் அபாயம்

## பொது மக்களுக்கு எச்சரிக்கை



**(அநுராதபுரம் நிருபர்)**

அநுராதபுரம் நகரில் டெங்கு நோய் பரவும் அபாயம் காணப்படுவதாக சுகாதார சேவைகள் திணைக்களத்தின் மாவட்ட தொற்றுநோய்ப் பிரிவு பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.



அநுராதபுரம் மாநகர எல்லைப்பகுதியில் இரண்டு வார காலப்பகுதிக்குள் டெங்கு தாக்கத்துக்குள்ளான ஏழுபேர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவு தகவல்கள் மூலம் தெரியவந்துள்ளது.

அநுராதபுரம், யூ.சீ. விடுதி பகுதி மற்றும் நகர்ப் பகுதிகளிலேயே குறித்த நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

அதனைத் தொடர்ந்து தொற்றுநோய் பிரிவு வைத்திய அதிகாரி உள்ளிட்ட குழுவினர்களும் அநுராதபுரம் மாநகர சபையின் பொதுச் சுகாதார அதிகாரிகளும் கூட்டாக இணைந்து நகரின் மணிக்கூட்டு கோபுரம் பகுதியிலிருந்து ரெக்ஸ் கட்டிடப்பகுதி வரைக்கும் நடத்திய சோதனை நடவடிக்கைகளின்போது டெங்கு நுளம்புகள் பரவக்கூடிய பல இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அங்கு டெங்கு நுளம்பு குடம்பிகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, அப்பகுதியில் புகை விசுறும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன், பருவப்பெயர்ச்சி மழையுடனான காலப்பகுதியில் பொதுமக்கள் தமது சுற்றுச் சூழலை துப்புரவான முறையில் வைத்துக் கொள்ளுதல் மற்றும் யோகட் கப், போத்தல்கள், நீர்த்தாங்கிகள், வடிகான்கள், நீர்த்தேங்கி நிற்கும் இடங்கள், டயர்கள், பிளாஸ்ரிக் பாத்திரங்கள், பொலித்தீன் உறைகள் என்பவற்றை உரிய முறையில் அகற்றுவதன் மூலம் டெங்கு நோய் தாக்கத்திலிருந்து பாதுகாப்பு பெறுவதுடன், ஏனையவர்களது உயிரையும் பாதுகாக்க முடியுமென சுகாதாரத் தரப்பினர் மேலும் தெரிவித்தனர்.

# போலி நாணயத்தாள்களுடன் இருவர் கைது

**(அநுராதபுரம் நிருபர்)**

5,000 ரூபா போலி நாணயத்தாள்களை வைத்திருந்த பாடசாலை மாணவன் உள்ளிட்ட இருவரை அநுராதபுரம் தந்திரிமலை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

தந்திரிமலை நகரிலுள்ள வியாபாரி ஒருவரினால் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் நேற்று முன்தினம் (25) பிற்பகல் சந்தேக நபர்கள் இருவரையும் கைது செய்துள்ளதுடன், போலி 5,000 ரூபா நாணயத்தாள்கள் இரண்டையும் கைப்பற்றியுள்ளனர்.

16 வயதுடைய தந்திரிமலை விகாரை வீதியை வசிப்பிடமாகக் கொண்ட பாடசாலை மாணவன் ஒருவரும் 21 வயதான இளைஞன் ஒருவருமே இதன்போது கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பாடசாலை தேவை ஒன்றுக்காக 5,000 ரூபா நாணயத்தாள் அடங்கிய படங்கள் வேண்டும் எனக்கூறி கையடக்கத் தொலைபேசியில் இருந்து 5,000 ரூபா நாணயத்தாள்களின் படங்களை வர்ண நிறத்தில் போட்டோ பிரதியெடுத்து, அதனை வேறு தாள்களில் பிரதி பண்ணிய நாணயத்தாள்களின் படங்களை ஒட்டி போலியான முறையில் தயாரித்துள்ளமை பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தந்திரிமலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட நால்வர் கைது

**(மஸ்கெலியா நிருபர்)**

கெசல்கமுவ ஓயாவில் சட்டவிரோதமான முறையில் மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட நால்வர் கைதுசெய்யப்பட்டதாக நோர்வூட் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ராஜநாயக்க தெரிவித்தார்.

நோர்வூட், வெஞ்சர் பகுதி ஊடறுத்து வரும் கெசல்கமுவ ஓயாவில் ஒரு சிலர் சட்டவிரோதமான முறையில் மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டு வருவதாக கிடைக்கப்பெற்ற தகவலை தொடர்ந்து, சம்பவ இடத்துக்கு விரைந்த நோர்வூட் பொலிஸார் அங்கு சட்டவிரோதமான முறையில் மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டு வந்த நால்வரையும் கைதுசெய்ததுடன், ஜெனரேட்டர் மற்றும் ஏனைய உபகரணங்களையும் கைப்பற்றியுள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் மாணிக்கக்கல் அகழ்வில் உள்ள குழியில் இருந்து நீரை அகற்றி இல்லங்கள் உடைத்து கொண்டு இருந்த வேளையில் கைதுசெய்யப் பட்டதாக நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர். கைதுசெய்யப்பட்டவர்கள் கம்பளை, இரத்தினபுரி, பொகவந்தலாவை பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்பதுடன், 35 முதல் 45 வயதுகளுக்குட்பட்டவர்கள் ஆவர்.

இவர்கள் நால்வரும் பொலிஸ் பிணையில் விடுதலை செய்யப்பட்டதுடன், எதிர்வரும் 31ஆம் திகதி ஹட்டன் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளனர்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று விதம் (26.12.2024)

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 179.6545 | 189.2460 |
| கனேடியன் டொலர் | 201.1315 | 210.0243 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 39.0158 | 41.6105 |
| யூரோ | 300.6499 | 313.3561 |
| ஜப்பான் யென் | 1.8385 | 1.9138 |
| சிங்கப்பூர் டொலர் | 212.1154 | 222.2803 |
| ஸ்ரேலிங் பவுன் | 363.0892 | 377.3203 |
| சுவிஸ் பிராங் | 320.5296 | 335.9595 |
| ஐ.அ. டொலர் | 290.7182 | 299.5208 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 785.5898 |
| குவைட் | குவைட் தினார் | 961.9467 |
| ஓமான் | ஓமான் றியால் | 770.0421 |
| கட்டார் | கட்டார் றியால் | 81.3281 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 78.9565 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 80.7192 |


## வாகனங்கள் விற்பனைக்கு விலைமனுக்கோரல்

| வாகன இலக்கம் | செசி இலக்கம் | வாகன வகை | தயாரிப்பு வகை |
|---|---|---|---|
| CP-PY - 5XXX | MAT478012E9R04868 | DUAL PURPOSE CAB | TATA 207-RX PICKUP |
| 13 - 9XXX | JHMAAK5430S107235 | MOTOR CAR | HONDA CIVIC |
| 16 - 9XXX | K10536343 | MOTOR CAR | NISSAN E K10 MARCH |
| 18 - 1XXX | JF1AC1HR0CB618627 | MOTOR CAR | SUBARU LEONE |
| 15 - 4XXX | 9743615 | MOTOR CAR | PEUGEOT 305 GL |
| WP-KT - 1XXX | MAT612259CKR00729 | MOTOR CAR | TATA NANO |
| WP-17 - 1XXX | AB348-117916 | MOTOR CAR | SUZUKI SWIFT |
| 52 - 5XXX | VUGJC22000872 | MOTOR VAN | NISSAN LARGO |
| 43 - 9XXX | NKR55E-7109679 | MOTOR LORRY | ISUZU NKR55E |
| NW-GC - 1XXX | FE516B-502382 | MOTOR LORRY | MITSUBISHI CANTER |
| WP-PV - 3XXX | LVAV3JA20CN011548 | MINI TRUCK | FOTON BJ1028V3JA2-1 |
| NP-DAC - 5XXX | MBX0001LBPK240701 | MINI TRUCK | PIAGGIO APE TRUCK PLUS |
| WP-DAA- 2XXX | MA1FA2HRRF6B23243 | MINI TRUCK | MAHINDRA MAXIMO PLUS VX |
| SG-PU - 2XXX | MBX0000VBPG239899 | MINI TRUCK | PIAGGIO APE MINI |
| WP-PV - 8XXX | MA1FA2HRRD6D23605 | MINI TRUCK | MAHINDRA MAXXIMO PLUS |
| WP-PW - 1XXX | LSCAB13G9DE002308 | MINI TRUCK | MICRO LOADER |
| SP-PS - 9XXX | MA1FA2HRRC6B20107 | MINI TRUCK | MAHINDRA MAXXIMO |
| NC-DAC - 6XXX | MA1FA2HRRF6H22352 | MINI TRUCK | MAHINDRA MAXIMO PLUS VX |
| SG-PU - 5XXX | LGHT1A172C9747609 | MINI TRUCK | DFSK EQ1020DR |

- வாகனம் பரிசோதனை செய்தல் : வாகன பிரிவு, தெனகமுவ வத்த, தம்புள்ளை வீதி, யக்கஹாப்பிட்டிய, குருநாகல்.
- வாகனம் பரிசோதனை செய்யும் கால எல்லை : 2024 டிசம்பர் 28, 29ஆம் திகதிகளில் மு.ப 9.00 மணி முதல் பி.ப 4.00 மணி வரை. டிசம்பர் 30ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை மட்டும்.
- டெண்டர் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி : 2024 டிசம்பர் 30ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை.
- டெண்டர் பத்திரத்தின் விலை : ரூபா.250/- (மீளப்பெற முடியாது)
- டெண்டர் பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய முகவரி : வாகன பிரிவு, தெனகமுவ வத்த, தம்புள்ளை வீதி, யக்கஹாப்பிட்டிய, குருநாகல்.
- டெண்டர் பெட்டி வைக்கப்பட்டுள்ள, டெண்டர் பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி : வாகன பிரிவு, தெனகமுவ வத்த, தம்புள்ளை வீதி, யக்கஹாப்பிட்டிய, குருநாகல்.

**டெண்டர் பத்திரங்களை தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ மேற்குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கையளிக்க முடியும். தபால் மூலம் அனுப்பும் டெண்டர் பத்திர கடித உறையின் முன் பக்க இடது புற மேல் மூலையில் “வாகன விற்பனைக்கான விலைமனுக்களுக்கான அழைப்பு” என்று குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். மேற் குறிப்பிடப்பட்டுள்ள வாகனம் தற்போதுள்ள நிலையில் பெற்றுக்கொடுப்பதுடன், டெண்டர் கோருவதற்கு முன் அகற்றும் உரிமை நிறுவன வசமானதாகும்.**

முகாமையாளர்,
**கொமர்ஷல் கிரெடிட் அன்ட் பினான்ஸ் பீ.எல்.சீ.**
வாகன பிரிவு, தெனகமுவ வத்த, தம்புள்ளை வீதி, யக்கஹாப்பிட்டிய, குருநாகல்.
**தொலைபேசி இல. 0112 000 000**
COMMERCIAL CREDIT

# பொலிஸ் திணைக்களத்தின் 2025ஆம் ஆண்டுக்கான வருடாந்த இடமாற்றம் ஆறு மாதங்களுக்கு ஒத்திவைப்பு

பொலிஸ் திணைக்களத்தின் 2025ஆம் ஆண்டுக்கான வருடாந்த இடமாற்ற உத்தரவுகளை நடைமுறைப்படுத்துவது ஆறு மாதங்களுக்கு இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பான உத்தரவை பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய நேற்று முன்தினம் பிறப்பித்துள்ளார்.

அதன்படி, ஜனவரி 01, 2025 முதல் நடைமுறைக்கு வரவிருந்த இடமாற்ற உத்தரவுகள், தற்போது ஜூன் 30, 2025 வரை நீடிக்கப்பட்டுள்ளன.

அவசர சூழ்நிலை காரணமாக அதிகாரிகளுக்கு ஏதேனும் தேவையிருப்பின், வருடாந்த இடமாறுதல் உத்தரவை முன்னரே நடைமுறைப்படுத்த அந்தந்த மாகாணத்துக்குப் பொறுப்பான டி.ஐ.ஜிக்களுக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், கடமை தேவைகளுக்கேற்ப வழங்கப்பட்ட 2025 வருடாந்த இடமாற்ற உத்தரவுகளை நடைமுறைப் படுத்துவதில் இந்த உத்தரவு தலையிடாது என பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.

# கழுத்தில் பாய்ந்து மறுபக்கம் வந்த கூரிய தடி

## வவுனியா வைத்தியர்களினால் வெற்றிகரமாக அகற்றப்பட்டது

கழுத்தில் கூரிய தடி ஒன்று குத்தியதில், உயிருக்கு ஆபத்தான நிலையில், வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட முதியவருக்கு வைத்தியர்கள் மேற்கொண்ட சத்திர சிகிச்சையினால் கூரிய தடி வெற்றிகரமாக அகற்றப்பட்டதுடன், அவர் உயிராபத்தின்றி காப்பாற்றப்பட்டார்.

குறித்த சத்திர சிகிச்சை நேற்று முன்தினம் (25) இடம்பெற்றது.





சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில்,

கழுத்தில் கூரிய தடி ஒன்று குத்தி மறுபக்கம் வந்த நிலையில், முதியவர் ஆபத்தான கட்டத்தில் வவுனியா வைத்தியசாலையில் கடந்த செவ்வாய்க்கிழமை (24) அனுமதிக்கப்பட்டிருந்தார்.

குறித்த முதியவருக்கு வைத்தியசாலையில் உரிய நேரத்தில் விரைவாக முன்னெடுக்கப்பட்ட சத்திர சிகிச்சை மூலம் அவரது கழுத்தில் குத்திய தடி அகற்றப்பட்டதுடன், அவர் உயிராபத்தின்றி காப்பாற்றப்பட்டார்.

இவ் வெற்றிகரமான சத்திர சிகிச்சையை உணர்வழியியல் மருத்துவ நிபுணர் நாகேஸ்வரன் தலைமையிலான மயக்கமருந்து அணியினருடன் இணைந்து சத்திர சிகிச்சை நிபுணர் ரஜீவ் நிர்மலசிங்கம் தலைமையிலான குழுவினர் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# திக்குவலையில் 70 வயது மூதாட்டி விஷ ஊசி செலுத்தப்பட்டு கொலை

## சந்தேக நபருக்கு விளக்கமறியல்

70 வயதான மூதாட்டி ஒருவரை விஷ ஊசி செலுத்தி கொலை செய்த சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வந்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக திக்குவலை பொலிஸார் தெரிவித்தார்.

இனந்தெரியாத நபர் ஒருவர் அந்த பெண்ணை பார்வையிட்டு, அவரது குடியிருப்புக்கு அருகில் அவருடன் உரையாடலில் ஈடுபட்டிருந்தபோது விஷ ஊசியை செலுத்திவிட்டு மோட்டார் சைக்கிளில் அப்பகுதியை விட்டு தப்பிச் சென்றுள்ளார்.

குறித்த மூதாட்டி உடனடியாக அயலவர்களுக்கு அறிவித்து மாத்தறை, பதீகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மாத்தறை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு நான்கு நாட்கள் சிகிச்சைப் பெற்று வந்த நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை உயிரிழந்துள்ளார்.

மூதாட்டியின் காணித் தகராறுடன் தொடர்புடைய வழக்கு ஒன்று நீதிமன்றில் இடம்பெற்றுவரும் நிலையில் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளதால், அதற்கும் இந்த கொலைக்கும் தொடர்பிருப்பதாக உறவினர்கள் சந்தேகம் எழுப்பிய நிலையில், கொலைச் சம்பவம் தொடர்பில் திக்குவலை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர்.

இந்நிலையில் அப்பகுதியில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வி. காட்சியின் ஆதாரங்களோடு பொலிஸார் சந்தேகநபரை கைதுசெய்து மாத்தறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியுள்ளனர். இதனையடுத்து சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டதாக திக்குவலை பொலிஸார் தெரிவித்தனர்.

# கோவில்குளம் பகுதியில் மோட்டார் சைக்கிள் விபத்து

## ஒருவர் பலி – மற்றுமொருவர் காயம்

*(பு.கஜிந்தன்)*

வவுனியா - கோவில்குளம் பகுதியில் நேற்று முன்தினம் (25) இரவு இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் இரவு குறித்த இளைஞர் மற்றொரு இளைஞருடன் மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளார்.

கோவில்குளம் பகுதியில் சென்ற மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து வீதியோரத்தில் இருந்த மின்சாரக் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியது. விபத்தில், இளைஞர்கள் இருவரும் காயமடைந்த நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் யாழ்ப்பாணம் அராலி பகுதியைச் சேர்ந்த ப.சஞ்சயன் என்ற 22 வயதான இளைஞரே உயிரிழந்துள்ளார்.

விபத்து தொடர்பாக வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# கடலில் நீராடச் சென்ற இந்தியப் பிரஜை நீரில் மூழ்கி உயிரிழப்பு

ஹிக்கடுவ, தொடந்துவ பிரதேச கடலுக்கு நீராடச் சென்ற இந்தியப் பிரஜை ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் நேற்று முன்தினம் (25) மாலை தனது மகள், மகன் மற்றும் மற்றுமொரு நபருடன் கடலில் நீராடிக் கொண்டிருந்த போதே குறித்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது, பிரதேசவாசிகள் அவரை கரைக்கு அழைத்து வந்து கராப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதித்தபோதிலும், அந்த நபர் உயிரிழந்துள்ளார்.

57 வயதான இந்தியப் பிரஜை ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த இந்தியப் பிரஜையின் சடலம் கராப்பிட்டிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், ஹிக்கடுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# வட மாகாணத்தில் ஆழிப்பேரலை 20ஆம் ஆண்டு நினைவேந்தல்

***(விஜயரத்தினம் சரவணன், சிவகுமார் திவியா, ஜோசப் நயன், பு.கஜிந்தன்)***

ஆழிப்பேரலையால் உயிரிழந்தோரின் 20ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு வட மாகாணத்தின் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி மற்றும் வவுனியா ஆகிய இடங்களில் நேற்று (26) கண்ணீருடன் அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அலுவலகத்தின் ஏற்பாட்டில், யாழ். மாவட்ட செயலகத்துக்கு முன்பாக தேசிய கொடியேற்றி வைக்கப்பட்டதை தொடர்ந்து நினைவேந்தல் நிகழ்வு கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவ அலுவலகத்தின் உதவிப்பணிப்பாளர் என்.ரீ.சூரியராஜ் தலைமையில் நடைபெற்ற நினைவேந்தலில், யாழ்ப்பாணம் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் கலந்து கொண்டு நினைவஞ்சலி செலுத்தினார்.

ஆத்ம சாந்திப் பிரார்த்தனைக்காக இரண்டு நிமிட அகவணக்கம் செலுத்தப்பட்டதுடன் ஈகைச்சுடர் ஏற்றப்பட்டது. இந்நிகழ்வில் யாழ்ப்பாணம் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) க.ஸ்ரீமோகனன், அனர்த்த முகாமைத்துவ பதவிநிலை அலுவலகர்கள், உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

மேலும், வவுனியா மாவட்ட செயலகத்தில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் ஏற்பாட்டில் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பீ.ஏ.சரத் சந்திர தலைமையில் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது உயிரிழந்தவர்களுக்கு காலை 9.25 - 9.27 வரை இரண்டு நிமிட அகவணக்கம் செலுத்தப்பட்டதுடன், இந்து, பௌத்த, கிறிஸ்தவ மதத்தலைவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகளுடன் உயிரிழந்தவர்களுக்கு தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

அத்துடன் சுனாமி பேரவலம் தொடர்பாகவும் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பாகவும் அரச அதிபரின் கருத்துரையும் இடம்பெற்றது. இந்நிகழ்வில் திணைக்களத் தலைவர்கள், அரச அதிகாரிகள், அரச உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை முல்லைத்தீவு, கள்ளப்பாடு தெற்குப் பகுதியில் நினைவேந்தல் நிகழ்வு உணர்வெழுச்சியுடன் முன்னெடுக்கப்பட்டது.

ஆழிப்பேரலையில் உறவுகளைப் பறிகொடுத்த இராசதுரை தவராசா மற்றும் மேரி ஜோசப் தங்கரத்தினம் ஆகியோர் இணைந்து பொதுச்சுடரை ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து ஆழிப்பேரலையின்போது உயிரிழந்த உறவுகளின் உருவப்படத்துக்கு மலர்தூவப்பட்டு, சுடரேற்றப்பட்டதுடன், ஆழிப்பேரலையினால் காவுகொள்ளப்பட்டவர்களின் உறவினர்கள் கதறி அழுது, கண்ணீர் சொரிந்து தமது அஞ்சலிகளை உணர்வெழுச்சியுடன் மேற்கொண்டனர்.

மேலும் இந்த நினைவேந்தல் நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், கரைதுறைப்பற்று பிரதேச சபை செயலாளர் திருமதி இராஜஜோகினி ஜெயக்குமார், காணி உத்தியோகத்தர் சோதிநாதன் சேந்தன், கள்ளப்பாடு தெற்கு கிராம அலுவலர் சு.கரிகாலன், கள்ளப்பாடு வடக்கு கிராம உத்தியோகத்தர் ஸ்ரீ.கௌசல்யா, கள்ளப்பாடு கிராம அமைப்புகளின் பிரதிநிதிகள், மீனவ அமைப்புகளின் பிரதிநிதிகள், கள்ளப்பாடு கிராம மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மன்னார் மாவட்ட செயலகத்திலும் சுனாமி நினைவேந்தல் நினைவு கூரப்பட்டது.

மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் மாவட்ட உதவி பணிப்பாளர் கே.திலீபன் தலைமையில் குறித்த நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது. மேலும் சர்வமதத் தலைவர்களின் பிரார்த்தனைகளும் இடம்பெற்றன.

குறித்த நிகழ்வில் சர்வமதத் தலைவர்கள், மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் மற்றும் திணைக்களத் தலைவர்கள் கலந்து கொண்டு தீபம் ஏற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

இதேவேளை, கிளிநொச்சி மாவட்ட செயலகத்திலும் சுனாமி நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது.

தேசியக்கொடி கொடி ஏற்றலுடன் சுனாமி அனர்த்தத்தில் உயிர்நீத்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரம், வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகம், பாராளுமன்ற உறுப்பினர்களான க.இளங்குமரன், ஜெ.ரஜீவன், ச.சிறீபவானந்தராஜா, இ.அர்ச்சுனா , மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.முரளீதரன், வடமாகாண அமைச்சுகளின் செயலாளர்கள் மற்றும் அரச அதிகாரிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.



யாழ்ப்பாணம்









மன்னார்







முல்லைத்தீவு









வவுனியா





கிளிநொச்சி





சுனாமி பேரலையின் 20ஆவது ஆண்டு நினைவு தின துஆ பிரார்த்தனையும் குர்ஆன் தமாம் நிகழ்வும் மாளிகைக்காடு அந்-நூர் ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலின் ஏற்பாட்டில் அதன் பதில் தலைவர் ஏ.எம். ஜாஹீரின் தலைமையில் நேற்று(26) காலை நடைபெற்றன. இதன்போது துஆப் பிரார்த்தனையை பள்ளிவாசலின் பேஷ் இமாம் மௌலவி ஏ.எல்.எம். மின்ஹாஜ் நிகழ்த்தினார்.

(மாளிகைக்காடு செய்தியாளர்)



சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் உயிரிழந்தவர்களின் நினைவாக கல்முனை கடற்கரை பள்ளிவாசல் நாஹூர் ஆண்டகை தர்ஹாவில் கத்தமுல் குர்ஆன் வைபவமும் விசேட துஆப் பிரார்த்தனையும் நேற்று(26) இடம்பெற்றது. கல்முனை மஸ்ஜிதுல் புர்க்கானிய்யா பேஷ் இமாம் மௌலவி நௌபர் அமீனினால் விசேட துஆப் பிரார்த்தனையும் கல்முனை முஹ்யித்தீன் ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல் மற்றும் கடற்கரைப் பள்ளிவாசல் நாஹூர் ஆண்டகை தர்ஹா ஷரீஃப் பிரதி தலைவர் மௌலவி ஏ.ஆர்சபா முஹம்மதுவினால் சுனாமி நினைவுரையும் நிகழ்த்தப்பட்டது. (கல்முனை செய்தியாளர்)



சுனாமி ஆழிப்பேரலை ஏற்பட்டு 20 வருடங்கள் கடந்துள்ள நிலையில், கல்முனை கடற்கரைப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள சுனாமி நினைவு தூபிக்கடியில் உயிரிழந்த உறவுகளை நினைவுகூரும் வகையில் நேற்று(26) தீபச்சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்நிகழ்வில் சிறுவர்கள், பெண்கள் மற்றும் ஆண்கள் என நூற்றுக்கணக்கான மக்கள் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

(பெரியநீலாவணை, பாண்டிருப்பு செய்தியாளர்கள்)



தம்பிலுவில் பெரிய முகத்துவாரம் பகுதியில் அமைந்துள்ள சுனாமி நினைவுத் தூபியில் தம்பிலுவில் சைவநெறிக்கூடம் அமைப்பின் ஏற்பாட்டில் நேற்று(26) காலை நினைவஞ்சலி நிகழ்வுகள் அனுஷ்டிக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து மேற்படி அமைப்பினால் தாகசாந்தி நிகழ்வும் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (திருக்கோவில் மேலதிக செய்தியாளர்)



சுனாமி அனர்த்தத்தின் 20ஆவது ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வுகள் திருச்செந்தூர் சுனாமிப் பேரலை நினைவுத்தூபிக் குழுவினரின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு, புதுமுகத்துவாரம் சுனாமி நினைவிடத்தில் நேற்று (26) அனுஷ்டிக்கப்பட்டது. இதன்போது 8.50 மணிக்கு பிரதான ஈகைச் சுடரை மறை மாவட்ட குரு முதல்வர் ஏற்றி வைக்க, அதனைத் தொடர்ந்து வண.பிதா ஜெகதாஸ், வண.பிதா ஜோசப்மேரி அடிகளார், மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான ஞானமுத்து ஸ்ரீநேசன், வைத்தியர் ஸ்ரீநாத் உட்பட உயிர்நீத்தவர்களின் உறவுகள் எனப் பலர் ஈகைச் சுடரை ஏற்றி வைத்தனர். அதனைத் தொடர்ந்து மௌனப் பிரார்த்தனை இடம்பெற்றது. (கல்லடி, காத்தான்குடி மேலதிக செய்தியாளர்கள்)





சுனாமி ஆழிப்பேரலையில் காவுகொள்ளப்பட்ட உறவுகளின் 20ஆவது ஆண்டு நினைவு தீபம் ஏற்றும் ஆத்ம சாந்தி பிரார்த்தனை நேற்று(26) காலை காரைதீவு இந்துசமய விருத்திச் சங்கத்தின் தலைவர் எஸ்.மணிமாறனின் தலைமையில் காரைதீவில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிவ.ஜெகராஜன், காரைதீவு பிரதேச செயலாளர் ஜி.அருணன் மற்றும் உத்தியோகத்தர்கள் உட்படப் பலரும் கலந்துகொண்டனர்.

(காரைதீவு செய்தியாளர்)



சுனாமி அனர்த்தத்தினால் உயிரிழந்தவர்களின் 20ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, சாய்ந்தமருது வொலிவேரியன் ஹிஜ்ரா மஸ்ஜிதில் கத்தமுல் குர்ஆன் தமாம் நிகழ்வும் விசேட துஆப் பிரார்த்தனையும் பள்ளிவாசலின் தலைவர் ஏ.எல்.எம்.அபூபக்கர் தலைமையில் நேற்று(26) இடம்பெற்றன. (எம்.வை.அமீர்)





சுனாமி அனர்த்த நினைவேந்தல் நிகழ்வு மூதூர் தக்வாநகர் பகுதியில் மூதூர் பிரதேச செயலாளர் எம்.பீ.எம்.முபாறக் தலைமையில் நேற்று (26) காலை இடம்பெற்றது. இதன்போது மூதூர் பிரதேசத்தில் உயிரிழந்த 286 நபர்களின் பெயர்கள் அடங்கிய நினைவுப் பெயர்ப்பலகை திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சியினால் திரை நீக்கம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (மூதூர் செய்தியாளர்)



சுனாமி அனர்த்த நினைவேந்தல் நிகழ்வு குச்சவெளி பிரதேச சபையின் செயலாளர் வெ.இந்திரஜித்தின் ஆலோசனைக்கமைய பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் டி.பிரதீப் தலைமையில் குச்சவெளி தலைமை அலுவலகத்தில் நேற்று(26) நடைபெற்றது.

(கிண்ணியா செய்தியாளர்)



ஆழிப்பேரலையின் 20ஆவது நினைவு நாள் நிகழ்வு பெரிய கல்லாறு அன்னை வேளாங்கன்னி தேவாலயத்துக்கு முன்பாக நேற்று(26) அனுஷ்டிக்கப்பட்டது. இதன்போது நிர்மாணிக்கப்பட்ட நினைவுத்தூபி திறந்து வைக்கப்பட்டதுடன் உறவினர்களினால் மலர்தூவி ஒளிச்சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. (துறைநீலாவணை செய்தியாளர்)



சுனாமி நினைவேந்தல் நிகழ்வு பெரியகல்லாறு ஜோன்ரி பிரிட்டோ விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில் பெரியகல்லாறு அருளானந்தர் தேவாலயத்துக்கு முன்பாக விளையாட்டுக்கழகத் தலைவர் ரி.ரொசாந்த் தலைமையில் நேற்று(26) நடைபெற்றது. இந்நிகழ்வில் அருட்தந்தையர்கள், பொதுமக்கள் என பலர் கலந்துகொண்டனர்.

(வீரமுனை செய்தியாளர்)



சுனாமி நினைவு தினம் அம்பாறை மாவட்ட செயலகத்தில் நேற்று(26) அனுஷ்டிக்கப்பட்டது. இதன்போது உயிரிழந்த உறவுகளுக்காக இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், தேசியக் கொடியும் அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (மத்தியமுகாம் செய்தியாளர்)



சுனாமி நினைவேந்தல் நிகழ்வுகள் மட்டக்களப்பு, நாவலடி சித்திவிநாயகர் ஆலயத்திலும் புதுமுகத்துவாரம் நினைவுத்தூபி பகுதியிலும் நேற்று(26) அனுஷ்டிக்கப்பட்டது. இதன்போது அருட்தந்தையர்களான ஜோசப்மேரி, க.ஜெகதாஸ் அடிகளார் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட தமிழரசுக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணக்கியன், ஞா.சிறிநேசன், இ.சிறிநாத், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான பூ.பிரசாந்தன், இரா.துரைரெட்னம், முன்னாள் மாநகர பிரதி முதல்வர் க.சத்தியசீலன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

(வீரமுனை செய்தியாளர்)



அக்கரைப்பற்று ,சின்னமுகத்துவாரம் நாற்பதாம் கட்டை பிரதேசத்தில் இரட்சகர் தேவாலயத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட சுனாமியின்போது உயிர் நீத்தவர்களுக்கான நினைவேந்தல் நிகழ்வு நேற்று(26) இடம்பெற்றது. அருட்தந்தை சம்சொன் லோட்ஸ் ஜெயநிக்ஸன் அடிகளாரால் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு தம்பட்டை இலவன் ஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நினைவஞ்சலி நிகழ்வும் அனுஷ்டிக்கப்பட்டது.

(அட்டாளைச்சேனை செய்தியாளர்)



சுனாமி அனர்த்தத்தில் உயிரிழந்தோருக்கு ஈகைச் சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தும் நிகழ்வு பாசிக்குடா கடற்கரையில் உள்ள நினைவுத் தூபியில் நேற்று(26) இடம்பெற்றது. பாசிக்குடா வலம்புரி விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஆழிப்பேரலை நினைவஞ்சலி பாடல்கள் அடங்கிய இறுவட்டும் வெளியிடப்பட்டது. பாடலை கவிஞர்களான பாசியூர் மாரிதாசன், ஆதித்திய தயானந்த சர்மா ஆகியோர் இயற்றியிருந்தனர்.

(வாழைச்சேனை மேலதிக செய்தியாளர்)

# வடகிழக்குப் படுகொலைகள் அனைத்துக்கும் அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்

## சாணக்கியன் எம்.பி. வேண்டுகோள்

(வீரமுனை செய்தியாளர்)

''தற்போதைய அரசாங்கம் கோட்டாபய அரசாங்கத்தின் காலப் பகுதியில் சட்டத்துறை தொடர்பில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளின் உண்மைத்தன்மையை விசாரணை செய்து வெளிக்கொணரவேண்டிய அதேநேரம், ஜோசப் பரராஜசிங்கம் கொலை வழக்கில் விடுதலையான பிள்ளையான் விடயத்தில் அசாத் மௌலான கூறிய விடயங்களையும் கருத்திற்கொண்டு விசாரணைகளை முன்னெடுக்கவேண்டும். மேலும், வடக்கு, கிழக்கில் நடந்த அனைத்து படுகொலைகளுக்கும் இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்'' - என இலங்கை தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கத்தின் 19ஆவது நினைவு தினம் மட்டக்களப்பு தேவநாயகம் மண்டபத்தில் புதன்கிழமை (25) மாலை தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணியின் மட்டக்களப்பு மாவட்டத் தலைவர் கே.சோபனனின் தலைமையில் அனுஷ்டிக்கப்பட்டது.

இதன்போது முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலைக்கு நீதிவேண்டி அமைதியான முறையில் கவனயீர்ப்பு ஊர்வலமொன்றும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. மட்டக்களப்பு பொலிஸ் தலைமையகத்துக்கு அருகிலிருந்து ஆரம்பமான கவனயீர்ப்புப் பேரணி நிகழ்வு நடைபெறும் இடம்வரை சென்றது.

அதனைத் தொடர்ந்து மண்டபத்தில் ஜோசப் பரராஜசிங்கத்தின் உருவப்படத்துக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு அகவணக்கம் செலுத்தப்பட்டது. மலர் மாலையை பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், மட்டக்களப்பு மாவட்டத் தலைவர் சோபனன் ஆகியோர் அணிவித்ததுடன், சிவஸ்ரீ முரசொலிமாறன் குருக்கள், அருட்தந்தை க.ஜெகதாஸ் அடிகளார் உட்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் ஈகைச்சுடர் ஏற்றி மலரஞ்சலி செலுத்தி அகவணக்கமும் செலுத்தினர்.

இந்நிகழ்வில், மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், கட்சி முக்கியஸ்தர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், மதத் தலைவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த சாணக்கியன் எம்.பி.,

''முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் ஜோசப் பரராஜசிங்கத்தின் 19ஆவது நினைவு தினத்தை தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட வாலிப முன்னணியினர் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர். கடந்த கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் ஜோசப் ஐயாவின் படுகொலைக்கு நீதிகிடைக்கும் என்ற எந்த நம்பிக்கையையும் நாங்கள் கொண்டிருக்கவில்லை. ஜோசப் பரராஜசிங்கம் கொலை தொடர்பில் கைதுசெய்யப்பட்டு சிறையிலிருந்த பிள்ளையான் கோட்டாபய ராஜபக்ஷவின் காலப் பகுதியில் விடுதலை செய்யப்பட்டார்.

பிள்ளையானுடன் இருந்த அசாத் மௌலானா என்பவர் சுவிஸ் அல்லது பிரான்ஸ் சென்று அங்கிருந்து பல்வேறு உண்மைகளைச் சொல்லியிருந்தார். அது தொடர்பாக சர்வதேச தொலைக்காட்சியொன்று தொகுப்பு ஒன்றை வெளியிட்டிருந்தது. அதில் பிள்ளையானை விடுதலை செய்வதற்காக சட்ட மா அதிபர் திணைக்களம் எவ்வாறு சிலரை இடமாற்றியது என்று அந்தக் காணொளியில் சொல்லப்பட்டது. அன்று நீதி அமைச்சராகயிருந்த அலி சப்ரியின் வழிகாட்டலில்தான் நடைபெற்றது என்று சொல்லப்பட்டது. பிள்ளையானை விடுதலைசெய்ததன் காரணமாக கோட்டாபய ஆட்சியில் எங்களுக்கு நீதி கிடைக்குமென்று நம்பவில்லை.

ஆனால், இந்த ஆட்சியில் கடந்த காலத்தில் நடந்த பல விடயங்கள் தொடர்பில் செயற்படுவோம் எனவும் உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் உட்பட சில படுகொலைகளை ஆராய்வதாகவும் தெரிவித்திருந்தனர். அந்த விசாரணைப் பட்டியலில் ஜோசப் பரராஜசிங்கத்தின் பெயர் உள்வாங்கப்படவில்லை.

இலங்கையின் சட்டத்துறைக்கு எதிராக முன்வைக்கப்பட்ட பல குற்றச்சாட்டுகளின் உண்மைத்தன்மையை தற்போதுள்ள அரசாங்கம் வெளிக்கொணரவேண்டும். அசாத் மௌலானா சொன்ன விடயங்களை வைத்து விசாரணைகளை முன்னெடுக்கவேண்டும். குற்றப் புலனாய்வுத் துறையானது பிள்ளையான் விடுதலை செய்வதற்காக முன்னெடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுகள் குறித்து மீண்டும் விசாரணையை முன்னெடுக்கவேண்டும். ஜோசப் பரராஜசிங்கம் கொலை தொடர்பான விசாரணைகளை மீண்டும் முன்னெடுத்து அதனுடன் தொடர்புபட்டவர்கள் இன்னும் உள்ளார்கள். அவர்களை மீண்டும் விசாரணைசெய்து ஜோசப் பரராஜசிங்கம் ஐயாவின் படுகொலைக்கு மட்டுமல்லாமல், வடக்கு,கிழக்கில் நடந்த அனைத்து படுகொலைகளுக்கும் நீதியை வழங்கும் வகையில் இந்த அரசாங்கம் செயற்படவேண்டும்'' - என்றார்.

# சுனாமி பேபி அபிலாஷ் 20ஆவது வருட நினைவு தினத்தில் சுடரேற்றி அஞ்சலி



(கனகராசா சரவணன்)

கல்முனை, பாண்டிருப்பில் சுனாமியின்போது கண்டெடுக்கப்பட்ட 'சுனாமி பேபி 81' என்றழைக்கப்படும் ஜெயராஜா அபிலாஷ் மட்டக்களப்பு குருக்கள்மடத்திலுள்ள அவரது வீட்டில் சுனாமியால் உயிரிழந்தவர்களுக்காக அமைக்கப்பட்டிருக்கும் நினைவுத்தூபியில் நேற்று (26) காலை 9.05 மணிக்கு சுடரேற்றி அஞ்சலி செலுத்தினார்.

கடந்த 2004ஆம் ஆண்டு கல்முனை பாண்டிருப்பு கடற்கரைப் பகுதியை அண்டிய பகுதியிலுள்ள வீட்டில் அபிலாஷ் இரண்டு மாதக் குழந்தையாக தாயாருடன் இருந்தபோது ஏற்பட்ட சுனாமியால் கடல் அலையால் அள்ளுண்டு அந்தப் பகுதியிலுள்ள காணியொன்றில் தெய்வாதீனமாக உயிர்தப்பினார்.

இந்நிலையில், கூடையொன்றில் இருந்த அவரை வைத்தியசாலையில் கடமையாற்றிய தாதியர் ஒருவர் எடுத்துச்சென்று தனது பிள்ளையென சொந்தம் கொண்டாடினார். இந்நிலையில், அபிலாஷின் பெற்றோர் அது தமது குழந்தையெ ப் போராடி சட்டத்தை நாடியதையடுத்து நீதிமன்றம் குழந்தையின் பெற்றோரை உறுதிப்படுத்துவதற்காக டி.என்.ஏ.பரிசோதனை மூலம் 52 நாட்களின் பின்னர் அபிலாஷ் உண்மையான பெற்றோரைக் கண்டறிந்து அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இன்று 20 வருடங்களாகின்றன. சுனாமியால் உயிரிழந்த அனைவரதும் நினைவாக அபிலாஷ் வீட்டில் நினைவுத்தூபி ஒன்றை அமைத்து வருடாவருடம் நினைவேந்தலை அனுஷ்டிக்கும் நிலையில், அபிலாஷ் அவரது குடும்பத்துடன் நினைவுத் தூபியில் சுடரேற்றி அஞ்சலி செலுத்தினார்.

# சுனாமி நினைவு தின நிகழ்வும் குருதிக்கொடையும்





(மாளிகைக்காடு செய்தியாளர்)

மாளிகைக்காடு ஜனாஸா நலன்புரி அமைப்பு சுனாமி அனர்த்தத்தின் 20ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்த சுனாமி நினைவு தின நிகழ்வும் குருதிக்கொடையும் மாளிகைக்காடு மத்தி தோணா வீதியில் அமைந்துள்ள ஜனாஸா நலன்புரி அமைப்பின் கட்டிடத்தில் நேற்று(26) நடைபெற்றன.

சுனாமியால் மரணித்த ஸுஹதாக்களை நினைவு கூர்ந்து நடைபெற்ற இந்த இரத்த தான முகாமை அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ். ஜெகராஜன், காரைதீவு பிரதேச செயலாளர் ஜீ. அருணன், காரைதீவு உதவிப் பிரதேச செயலாளர் எஸ். பார்த்தீபன் உட்பட பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டு தொடக்கி வைத்தனர்.

இந்த இரத்ததான முகாமில் அமைப்பின் உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் ஆர்வத்துடன் கலந்து கொண்டு குருதிக்கொடை வழங்கினர்.

இந்த 20ஆவது சுனாமி நினைவு தின குர்ஆன் தமாம், துஆப் பிரார்த்தனை, விசேட சொற்பொழிவு, குருதிக்கொடை நிகழ்வில் உலமாக்கள், காரைதீவு பிரதேச செயலக அரச அதிகாரிகள், பள்ளிவாசல்களின் நிர்வாகிகள், பொது அமைப்புகளின் பிரதானிகள், மாளிகைக்காடு ஜனாஸா நலன்புரி அமைப்பின் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

நத்தார் தினத்தில் சோகம்

# இரு மாணவர்கள் உட்பட மூவர் கடலில் மூழ்கி பலி

## சடலங்களும் மீட்பு

(கனகராசா சரவணன்)

நத்தார் தினத்தன்று கடலில் நீராடச் சென்ற தந்தை, மகன் உள்ளிட்ட மூவர் கடலலையில் அள்ளுண்டு சென்று உயிரிழந்துள்ளனர்.

இச்சம்பவம் திருக்கோவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தாண்டியடி, உமிரி கடற்கரைப் பகுதியில் புதன்கிழமை(25) இடம்பெற்றுள்ளது.

பொத்துவில், சங்கமன்கண்டியைச் சேர்ந்த 38வயதான மயில்வாகனம் நந்தராஜ், அவருடைய 15வயதான மகன் டினுஜன், சகோதரியின் மகனான 17வயதான கிரிஷோர் ஆகிய மூவரே இவ்வாறு நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளனர்.இதனைதொடர்ந்து, காணாமல்போனோரை உறவினர்கள், கடற்படையினர் மற்றும் பொலிஸார் இணைந்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட நிலையில், விநாயகபுரம், மங்கமாரி கடற்கரை பகுதியில் நேற்று காலை முதலில் 17வயதான சிறுவனின் சடலம் கரையொதுங்கியதுடன் சிலமணி நேரத்தின் பின்னர் ஏனைய இருவரது சடலங்களும் கரையொதுங்கின. பின்னர் மூவரது சடலங்களையும் மீட்டு திருக்கோவில் ஆதார வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டது. இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை திருக்கோவில் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் தேசிய பாதுகாப்பு தினம் அனுஷ்டிப்பு





(மட்டக்களப்பு)

சுனாமி பேரலை ஏற்பட்டு 20 வருடங்கள் பூர்த்தியாகியுள்ள நிலையில், சுனாமி பேரலையினால் உயிர்நீத்த மக்களுக்கான நினைவேந்தல் நிகழ்வு மட்டக்களப்பு மாவட்ட செயலக வளாகத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் ஜஸ்டினா முரளிதரன் தலைமையில் நேற்றுக் (26) காலை இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் எட்டு பிரதேச செயலகப் பிரிவுகளைச் சேர்ந்த 68 கிராம சேவகர் பிரிவுகளில் சுனாமி அனர்த்தம் பெரிதும் பாதிப்பை ஏற்படுத்தியிருந்தது. இச்சுனாமி பேரலையினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் 2,840 பேர் உயிரிழந்ததோடு 908 பேர் காணாமல் போயிருந்தனர். மேலும் 18,041 பேர் தமது வீடுகளையும் இழந்த நிலையே மட்டக்களப்பில் இருந்தனர்.

இவ்வாறான இயற்கைச் சீற்றத்தினால் உயிரிழந்து காணாமல் போனவர்களை நினைவுகூரும் நாளாக இலங்கை அரசு இத்தினத்தை தேசிய பாதுகாப்பு தினமாகப் பிரகடனப்படுத்தி ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் மாதம் 26ஆம் திகதி 09 மணிக்கு அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

இந்நிகழ்வில் சர்வமதத் தலைவர்கள், மேலதிக அரசாங்க அதிபர் திருமதி எஸ்.ஸ்ரீகாந்த், உதவி மாவட்ட செயலாளர் ஜீ.பிரணவன், மாவட்ட செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர்கள், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலைய உதவிப் பணிப்பாளர் எ.எஸ்.எம் சியாத், பிரதம உள்ளக கணக்காளர், மாவட் செயலக கணக்காளர், நிர்வாக உத்தியோகத்தர் மற்றும் பதவி நிலை உத்தியோகத்தர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.





*சுனாமி அனர்த்தம் இடம்பெற்று 20 வருடங்கள் பூர்த்தியானதை முன்னிட்டு சம்மாந்துறை பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலாளர் யூ.எம்.அஸ்லம் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று(26) நினைவஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. காலை 9.25 மணிமுதல் 9.27 வரை மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.* (நாவிதன்வெளி செய்தியாளர்)

# சுனாமியால் உயிரிழந்தவர்களுக்கு கிண்ணியாவில் சர்வமதப் பிரார்த்தனை





(சீனக்குடா செய்தியாளர்)

சுனாமி அனர்த்தம் இடம்பெற்று 20 வருடங்கள் பூர்த்தியானதை முன்னிட்டு, நேற்று (26) கிண்ணியாவில் பல இடங்களில் தேசிய பாதுகாப்பு தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

கிண்ணியா நகர சபை மற்றும் பிரதேச செயலகம் ஆகியவற்றால் ஏற்பாடு செய்யப்பட்ட சுனாமி நினைவு தின பிரதான வைபவம் கிண்ணியா கடற்கரை பூங்காவில் இடம்பெற்றது.

கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.எம்.கனி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சுனாமி அனர்த்தத்தினால் உயிரிழந்தவர்களுக்கு காலை 9.25 மணி முதல் 9.27 வரை மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

மேலும், கிண்ணியா பிரதேசத்தில் உயிரிழந்த 386 பேரின் ஈடேற்றத்துக்காக சர்வமத பிரார்த்தனைகளும் இடம்பெற்றன. இதனை கிண்ணியா ஜம்இய்யதுல் உலமா சபையின் பிரதித் தலைவர் மௌலவி ஏ.ஜே.எம்.ரியாஸ், ஆலங்கேணி மாரியம்மன் ஆலய பிரதம குரு தினேஷ்ராஜ் சர்மா ஆகியோர் நடத்தினர்.

இந்நிகழ்வில் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி எம்.எச்.எம்.றிஸ்வி, கிண்ணியா மஜ்லிஸ் சூரா சபைத் தலைவர் ஏ.ஆர்.எம்.பரீட் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# ஐஸ் போதைப்பொருளுடன் கல்முனையில் ஒருவர் கைது

(பாறுக் ஷிஹான்)

ஐஸ் போதைப் பொருட்களை பொதி செய்து விநியோகித்த சந்தேக நபரை விசேட அதிரடிப் படையினர் கைதுசெய்துள்ளனர்.

கல்முனை தலைமையகப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் புதன்கிழமை(25) மாலை கல்முனை விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது கல்முனைக்குடி 02 பகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டார்.

சந்தேக நபரிடமிருந்து ஒரு கிராம் 790 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் கல்முனை தலைமையகப் பொலிஸ் நிலையத்தில் சந்தேக நபர் சான்றுப்பொருட்களுடன் சட்ட நடவடிக்கைக்காக ஒப்படைக்கப்பட்டார்.

அத்துடன், குறித்த சோதனை நடவடிக்கையானது கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.ஏ.டி.சி.எஸ்.ரத்நாயக்கவின் தலைமையில் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்முனை தலைமையகப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கட்டாக்காலி மாடுகளின் தொல்லை அதிகரிப்பு

## கட்டுப்படுத்துமாறு திருமலை மக்கள் கோரிக்கை



(கிண்ணியா செய்தியாளர்)

திருகோணமலை நகர சபை பிரிவுக்குட்பட்ட பிரதான வீதிகளில் கட்டாக்காலி மாடுகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதால் பல அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக பாதசாரிகள் தெரிவிக்கின்றனர்.

திருகோணமலை நகர் பிரதான வீதியில் பல மாடுகள் நிற்பதால் போக்குவரத்துத்தடை ஏற்படுவதுடன் விபத்துச் சம்பவங்களும் இடம்பெறுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த நகர் பகுதியில் வீடுகளில் சேரும் குப்பைக் கழிவுகளை வீட்டின் முன் நுழைவாயிலின் வெளிப்பகுதியில் வைப்பதால் அதனை இந்தக் கட்டாக்காலி மாடுகள் அங்கும் இங்கும் இழுத்து வீதியை அசுத்தப்படுத்துவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே, குறித்த கட்டாக்காலி மாடுகளைக் கட்டுப்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# கிணற்று நீரை சுத்திகரிக்கும் வேலைத்திட்டம்

(மீராவோடை செய்தியாளர்)



கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட காவத்தமுனை பகுதியிலுள்ள கிணற்று நீர் சுத்திகரிக்கும் வேலைத்திட்டம் செவ்வாய்க்கிழமை(24) முன்னெடுக்கப்பட்டது.

அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தால் வெள்ளநீர் கிணற்றில் புகுந்து கிணறுகள் அசுத்தமடைந்து காணப்பட்டன. இதனால் கிணற்று நீரை மக்கள் பாவிப்பதில் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வந்தனர்.

இதனைக் கருத்திற்கொண்ட காவத்தமுனை உதவும் உள்ளங்கள் சமூக சேவைகள் அமைப்பினர் கல்குடா ரைஸ்அப் அமைப்பின் நிதியுதவியுடன் கிணற்று நீரை சுத்தப்படுத்தும் வேலைத்திட்டத்தை முன்னெடுத்தனர். இந்நடவடிக்கை மூலம் இதுவரை 83 கிணறுகள் சுத்திகரிக்கப்பட்டு மக்கள் பாவனைக்காக வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# செட்டியார்தெரு நாட்டுக்கோட்டை நகரத்தார் புதிய கதிரேசன் ஆலயத்தில் ஐயப்ப மண்டலாபிஷேக பூஜை...












































‘தமிழன்’ பத்திரிகையின் ஊடக அனுசரணையில் கொழும்பு, செட்டியார்தெரு நாட்டுக்கோட்டை நகரத்தார் புதிய கதிரேசன் ஆலயத்தில் அகில இலங்கை சபரி தீர்த்த யாத்திரைக் குழுவின் குருசாமி ராஜேந்திரன் தலைமையில் இடம்பெற்ற மகர ஜோதி மண்டலாபிஷேக பூஜையில் விரத மாலை அணிந்த சாமிமார்களின் பஜனை, கூட்டு வழிபாடுகள் நடைபெற்றதுடன், சிறப்பு அதிதியாக ராஜேந்திரன் செட்டியார், தொழிலதிபர் ரவி குருசாமி, ரவீந்திரன் குருசாமி, பாபுசர்மா, லிபர்ட்டி பப்ளிசர்ஸ் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி விஜித் சந்ரசேன, அருண பத்திரிகையின் பிரதம ஆசிரியர் மகிந்த இலேபெரும, தமிழன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஆர்.சிவராஜா, உதவி சந்தைப்படுத்தல் முகாமையாளர் ஹர்ஷன குருவிட்ட ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர். இந்நிகழ்வில் பக்த அடியார்கள் பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தமையை படங்களில் காணலாம்.

**படப்பிடிப்பு:** *லலித் பெரேரா, கிரிசான் காரியவசம், எம்.நசார்.*



# இஸ்ரேல் தாக்குதலில் பலஸ்தீன ஊடகவியலாளர்கள் ஐவர் பலி!






காஸாமீது இஸ்ரேல் இராணுவம் நடத்திய தாக்குதலில் செய்தி சேகரிப்பில் ஈடுபட்டிருந்த பலஸ்தீன ஊடகவியலாளர்கள் ஐந்து பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் போராளிகளுக்கிடையிலான போர் கடந்த 2023ஆம் ஆண்டு ஒக்டோபர் 07ஆம் திகதி தொடங்கிய நிலையில் இப்போர் ஓராண்டை கடந்தும் இன்றும் நீடிக்கிறது. இந்நிலையில் காஸாமீதான இஸ்ரேலின் தாக்குதலில் இதுவரை 45,361இற்கும் மேற்பட்ட பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் 1,07,803இற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் (25) காஸாவின் மத்தியப் பகுதியில் அமைந்துள்ள நுசிராத் அகதிகள் முகாமின் மீது இஸ்ரேல் இராணுவம் தாக்குதல் நடத்தியது. இதன்போது அங்குள்ள அல்-அவ்தா வைத்தியசாலையின் வெளியே செய்தி சேகரிப்பில் ஈடுபட்டிருந்த பலஸ்தீன ஊடகவியலாளர்களின் வாகனம் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது. அப்போது அங்கிருந்த ஊடகவியலாளர்கள் ஐவர் கொல்லப்பட்டுள்ளனர். கொல்லப்பட்ட ஐவரும் அப்பகுதியின் குத்ஸ் எனும் ஊடகத்தைச் சார்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பத்திரிகை மற்றும் ஊடகவியலாளர்களுக்கான பாதுகாப்பு ஆணையம் வெளியிட்டுள்ள தகவலின் அடிப்படையில் காஸா மீதான இஸ்ரேலின் போரில் கிட்டத்தட்ட 130இற்கும் மேற்பட்ட ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கடும் குளிருக்கு மூன்று குழந்தைகள் பலி**

இந்நிலையில், காஸாவில் கடந்த 02 நாட்களுக்குள் 03 குழந்தைகள் குளிரில் நடுங்கி உயிரிழந்துள்ளன. காஸாவின் கான் யூனுஸ் நகரின் முவாஸி பகுதியிலுள்ள முகாமின் கூடாரத்தில் குடும்பத்துடன் தங்கியிருந்த 03 வாரக் குழந்தையான சிலா தான் அந்த 03 குழந்தைகளில் கடைசியாக தற்போது குளிரினால் உயிரிழந்தது.

இரவு முழுவதும் குளிரில் அழுதுகொண்டே இருந்த குழந்தைக்கு அதன் பெற்றோர் போர்வைகளைப் போர்த்தியுள்ளனர். காலை எழுந்து பார்த்தபோது குழந்தை அசைவின்றி இருந்துள்ளது.

உடனடியாக, அதன் பெற்றோர் அந்த குழந்தையை அங்குள்ள வைத்தியசாலைக்கு கொண்டுச் சென்றனர். அங்கு சிலாவை பரிசோதித்த மருத்துவர்கள் அந்த குழந்தையின் நுரையீரல் செயலிழந்து உயிரிழந்துவிட்டதாக தெரிவித்தனர். இரவு நேரங்களில் காஸாவில் 09 டிகிரி செல்சியஸ் அளவுக்கு வெப்பநிலை குறைந்து வருகின்றது. இதனால் குழந்தைகள் மட்டுமில்லாமல் பெரியவர்களும் குளிர் அலைக்கு பலியாகும் அபாயத்திலுள்ளனர்.

இதுகுறித்து கான் யூனுஸ் பகுதியிலுள்ள நாஸர் மருத்துவமனையின் குழந்தைகள் பிரிவு தலைமை மருத்துவர் அஹமது அல்-ஃபர்ரா தெரிவிக்கையில், கடந்த 48 மணிநேரத்தில் குளிரலையில் பாதிக்கப்பட்டு சிலா உட்பட 03 நாட்களேயான குழந்தை ஒன்றும் 01 மாதக் குழந்தையொன்றும் உயிரிழந்ததாக தெரிவித்துள்ளார். மேலும், உயிரிழந்த குழந்தைகள் அனைத்தும் குளிரினால் ஏற்படும் ஹைப்போதெர்மீயாவினால் பாதிக்கப்பட்டு உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

# உலகெங்கும் அமைதி பரவட்டும்; ஆயுதங்களின் சத்தம் ஓயட்டும்!

## கிறிஸ்மஸ் உரையில் பாப்பரசர் பிரான்சிஸ் வலியுறுத்து



''வரவிருக்கும் புதிய ஆண்டில் உலகை ஆட்டிப்படைக்கும் பிளவுகளை கடக்கவும் ஆயுதங்களின் சத்தத்தை அமைதிப்படுத்தவும் அனைத்து நாடுகளிலும் அனைத்து மக்களும் தைரியம் பெற வேண்டும்'' என பாப்பரசர் தனது கிறிஸ்மஸ் செய்தியில் தெரிவித்துள்ளார்.

உலகெங்கிலும் கிறிஸ்மஸ் பண்டிகை நேற்றுமுன்தினம் (25) கோலாகலமாக கொண்டாடப்பட்டது. கிறிஸ்மஸ் மற்றும் ஜுபிலி ஆண்டு தொடங்குவதையொட்டி, வத்திக்கான் சிட்டியில் செயிண்ட் பீட்டர்ஸ் பசிலிகாவில் பாப்பரசர் பிரான்சிஸ் 'ஊர்பி எத் ஓர்பி' எனும் சிறப்புரையாற்றினார். அதில்,

''பாவங்களை போக்கவும் பாவ தண்டனையை நீக்கவும் சிறப்பு சலுகைகள் வழங்கப்படும் ஜுபிலி ஆண்டு தொடங்குகிறது. இந்த நன்னாளில் அனைத்து நாடுகளிலுமுள்ள அனைத்து மக்களுக்கும் ஒவ்வொரு தனிநபருக்கும் அழைப்பு விடுக்கிறேன். நீங்கள் நம்பிக்கையின் யாத்ரீகர்கள் ஆக வேண்டும். ஆயுதங்களின் சத்தத்தை அமைதியாக்கவும் உலகை ஆட்டிப்படைக்கும் பிளவுகளை கடக்கவும் தேவையான தைரியத்தை காணவேண்டும்.

போரால் பாதிக்கப்பட்டுள்ள உக்ரைனில் அமைதி நிலவட்டும். அதை அடைவதற்கு தேவையான பேச்சுவார்த்தைக்கான கதவுகள் திறக்கட்டும். மத்திய கிழக்கில் ஆயுதங்களின் சத்தம் ஓயட்டும். குறிப்பாக காஸாவில் மனிதாபிமான நிலைமை மிகவும் மோசமாகவுள்ளது.

அங்கு போர் நிறுத்தம் ஏற்படட்டும். சிறைபிடிக்கப்பட்டுள்ள பணயக் கைதிகள் விடுவிக்கப்படட்டும். பசி, போரால் சோர்வுற்றுள்ள மக்களுக்கு உதவிகள் வழங்கப்படட்டும். பேச்சுவார்த்தை மற்றும் அமைதிக்கான கதவுகள் மோதல்களால் அழிக்கப்பட்ட பகுதி முழுவதும் திறக்கப்படட்டும். ஆபிரிக்கா, மியன்மார், கொலம்பியாவில் அமைதி நிலவட்டும். சைபிரஸில் பிரிவினை சுவர்கள் தகர்க்கப்படட்டும். நம் அனைவருக்காகவும் கடவுள் காத்திருக்கிறார். அவர் நுழைவாயிலில் நமக்காகக் காத்திருக்கிறார். அவர் நம் ஒவ்வொருவருக்காகவும் காத்திருக்கிறார்.

குறிப்பாக மிகவும் வலுவற்றவர்களுக்காக அவர் காத்திருக்கிறார், போராலும் பசியாலும் துயருறும் அனைத்து குழந்தைகளுக்காகவும் காத்திருக்கிறார். தனிமை மற்றும் கைவிடப்பட்ட சூழ்நிலையில் வாழ வேண்டிய கட்டாயச் சூழலுக்குத் தள்ளப்பட்ட வயது முதிர்ந்தோருக்காக அவர் காத்திருக்கிறார். அவர் தனது இதயக் கதவை நமக்குத் திறந்தது போல, நம்முடைய இதயக் கதவுகளை அவருக்குத் திறப்போம். நம் எதிரிகளையும் அரவணைப்போம்'' - இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.





# 'சுனாமி': 20 ஆண்டுகள் கடந்தும் ஆறாத ரணம்

சுனாமி ஆழிப்பேரலை ஏற்பட்டு நேற்றுடன் (26) 20 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. ஆழிப்பேரலையால் உறவுகளை இழந்த குடும்பத்தினர் கடலில் பால் ஊற்றியும் பூக்களை மிதக்கவிட்டும் மெழுகுவர்த்தி - தீபமேற்றியும் தமது உறவுகளை நினைவு கூர்ந்தனர்.

இந்தோனேஷியாவின் சுமத்ரா தீவில் 9.3 மற்றும் 9.1 ரிச்டர் அளவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சுனாமி பேரலை இலங்கை, இந்தியா இந்தோனேஷியா, மியன்மார், தாய்லாந்து உட்பட 14 நாடுகளின் கரையோரங்களை வாரி சுருட்டியது.

சுனாமிப்பேரலையால் 02 இலட்சத்து 27ஆயிரத்து 898 பேர் உயிரிழந்துள்ளனர். பல்லாயிரக்கணக்கானோர் தமது உறவுகளையும் உடைமைகளையும் இழந்தனர். ஆயிரக்கணக்கான குழந்தைகள் தமது தாய், தந்தையரை இழந்து அநாதரவாக்கப்பட்டனர்.

பல்வேறு உதவிகளை சர்வதேச தொண்டு நிறுவனங்களும் பாதிக்கப்பட்ட நாடுகளின் அரசுகளும் மேற்கொண்டு வந்தாலும் பாதிக்கப்பட்ட மக்கள் இன்றளவும் பேரழிவின் வடுவை சுமந்தவர்களாக சோகத்தில் தவித்து வருகின்றனர்.



# பறவைக்கூட்டம் மோதியதால் விமானம் விபத்துக்குள்ளானதா?

அஸர் பைஜான் எயார்லைன்ஸ் நிறுவனத்துக்கு சொந்தமான விமானம் கஜகஸ்தானின் அக்டா நகரில் விபத்துக்குள்ளானதில் 38 பேர் உயிரிழந்துள்ள நிலையில் 11 வயது சிறுவன் உட்பட 29 பேர் காயங்களுடன் உயிர்த்தப்பியுள்ளனர்.

முதற்கட்ட விசாரணையில், பறவை கூட்டத்தின் மீது விமானம் மோதி, அதனால் தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டு விமானம் விபத்துக்குள்ளாகியிருக்கலாம் என ரஷ்ய விமான போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக முழுமையாக விசாரணை நடத்த கஜகஸ்தான், அஸர் பைஜான் நாடுகள் நிபுணர்கள் அடங்கிய குழுவை நியமித்துள்ளன. இந்த விசாரணையில் அஸர் பைஜான் அரசுக்கு முழு ஒத்துழைப்பு வழங்குவதாக கஜகஸ்தான் தெரிவித்துள்ளது.

விமானத்தின் கறுப்புப் பெட்டி மீட்கப்பட்டு ஆய்வு செய்யப்படவுள்ளது. விமானத்தில், அஸர் பைஜானை சேர்ந்த 37 பேர், ரஷ்யாவை சேர்ந்த 16 பேர், கஜகஸ்தானை சேர்ந்த 06 பேர், கிர்கிஸ்தானைச் சேர்ந்த 03 பேர் பயணித்ததாக விமான நிறுவனம் பயணிகளின் பட்டியலை வெளியிட்டுள்ளது.

விபத்தில் பலியானோர் குடும்பத்தினருக்கு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின், துருக்கி ஜனாதிபதி எர்டோகன் உள்ளிட்ட உலக தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர். இந்த விபத்தை தொடர்ந்து அஸர் பைஜான் ஜனாதிபதி இல்ஹாம் அலியேவ் தனது ரஷ்ய பயணத்தை இரத்துச் செய்துள்ளார்.

அஸர் பைஜான் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் எம்பரர்-190 ரக விமானம் 62 பயணிகள் மற்றும் 05 பணியாளர்கள் உள்ளடங்களாக 67 பேருடன், அஸர் பைஜான் தலைநகர் பாகுவிலிருந்து ரஷ்யாவின் செசன்யாவிலுள்ள க்ரோஸ்னி நகர் நோக்கி நேற்றுமுன்தினம் (25) சென்றுள்ளது. இந்நிலையில் அங்கு கடும் பனி மூட்டம் நிலவியதால், விமானம் கஜகஸ்தானின் அக்டா நகருக்கு திருப்பிவிடப்பட்டுள்ளது.

விமான அக்டா விமான நிலையத்தை நெருங்கியபோது, பறவைக் கூட்டம் விமானத்தில் மோதியது. விமானத்தின் திசையை மாற்றுவதிலும் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இதனால், விமானத்தை அவசரமாக தரையிறக்க விமானி வேண்டுகோள் விடுத்தார். விமான நிலையத்தை சுற்றி பறந்து கொண்டிருந்த விமானம் திடீரென கீழே இறங்கியது. விமானத்தை மேலே எழுப்ப விமானி முயன்றுள்ளார். ஆனால், கட்டுப்பாட்டை இழந்த விமானம் தாறுமாறாக பறக்கத் தொடங்கியது.

விமான நிலையத்திலிருந்து 3 கி.மீ. தூரத்திலுள்ள காஸ்பியன் கடற்கரையிலுள்ள நிலப் பகுதியில் வலதுபக்கம் சாய்ந்த நிலையில் தரையிறங்கி மோதியது. இதில் விமானம் தீப்பற்றி எரிந்துள்ளது. விமானத்தின் அவசரகால கதவு வழியாக சில பயணிகள் வெளியேறினர். அவர்களை மீட்புக் குழுவினர் மீட்டு வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர்.

**என்ன நடந்தது?**

அஸர் பைஜானின் பாகுவிலிருந்து ரஷ்யாவின் குரோஸ்னி விமான நிலையம் வெறும் 550 கி.மீ. தொலைவிலுள்ளது. இதனால் விபத்துக்குள்ளான விமானத்தின் சராசரி பயண நேரம் 57 நிமிடங்கள் மட்டுமே. ஆனால், பனி காரணமாக விமானம், காஸ்பியன் கடல் தாண்டி எதிர்த்திசையிலுள்ள அண்டை நாடான கஜகஸ்தானின் அக்டா விமான நிலையத்துக்கு தரையிறங்கச் சென்றுள்ளது. ஏன் கடல் தாண்டி அக்டா நகருக்கு திரும்பி விடப்பட்டது என்பது குறித்து அதிகாரிகள் விளக்கம் அளிக்கவில்லை. மொத்தம் 02 மணி நேரம் 33 நிமிடங்கள் பறந்துள்ளது. அங்கும் தரையிறங்க முடியாமல் சிறிது நேரம் வானில் வட்டமடித்த படி இருந்துள்ளது.

அந்த சமயத்தில் விமானம் சீராக பறக்காமல், அதன் உயரத்தில் ஏற்ற இறக்கங்கள் அதிகளவில் இருந்துள்ளது. இந்த விமானம் விபத்துக்குள்ளாவதற்கு முன்பாக, ரஷ்யாவின் தெற்குப் பகுதியில் ட்ரோன் தாக்குதல் நடந்துள்ளது. இதனால் சில விமான நிலையங்கள் மூடப்பட்டதன் காரணமாக, விமானம் அக்டா நகருக்கு திருப்பி விடப்பட்டிருக்கலாம் எனக் கூறப்படுகிறது. எனவே, நீண்ட தூரம் பறந்ததால் எரிபொருள் இல்லாமல் விமானம் விழுந்து நொறுங்கியதா, பறவை மோதி பாதிக்கப்பட்டதா என்பது விசாரணையில்தான் தெரியவரும்.

# ஜப்பான் எயார்லைன்ஸ் மீது சைபர் தாக்குதல்

ஜப்பான் எயார்லைன்ஸ் மீதான சைபர் தாக்குதல் அதன் சேவையை பாதித்துள்ளதால் பயணிகள் கடும் சிரமத்துக்குள்ளாகியுள்ளனர். அந்தவகையில் நேற்று (26) காலை 7.30 மணியளவில் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக விமான சேவையை நிறுத்துவதாக ஜப்பான் எயார்லைன்ஸ் நிறுவனம் அறிவித்தது. நிலைமை சீரானதும் அது குறித்த தகவலை பயணிகளுக்கு பகிர்கிறோம் என்றும் சிரமத்துக்கு வருந்துகிறோம் எனவும் ஜப்பான் எயார்லைன்ஸ் தமது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டிருந்தது. இதனால் ஜப்பான் எயார்லைன்ஸ் விமானங்கள் புறப்பாடு மற்றும் வருகை தாமதமாகியதுடன் டிக்கெட் விற்பனையும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு சர்வதேச விமான சேவை பாதிக்கப்பட்டுள்ளதால் பயணிகள் கடும் சிரமத்துக்குள்ளாகினர். பிரச்சினை என்னவென்று அடையாளம் காணப்பட்டு ரவுட்டரொன்றை shut down செய்துள்ளதாக ஜப்பான் எயார்லைன்ஸ் தெரிவித்துள்ளது. ஜப்பானின் மற்றொரு முக்கிய விமான போக்குவரத்து நிறுவனமான ஆல் நிப்பான் எயார்வேஸ் தங்கள் அமைப்புகளில் சைபர் தாக்குதலுக்கான அறிகுறிகள் தென்படவில்லை என்று தெரிவித்துள்ளது. பரபரப்பான விமான போக்குவரத்தை கையாளும் ஜப்பான் எயார்லைன்ஸில் ஏற்பட்டுள்ள இந்த சைபர் தாக்குதல் உலகளவில் பேசும் பொருளாகியுள்ளது.

# ஆப்கான் மீது பாகிஸ்தான் வான் தாக்குதல்



ஆப்கானிஸ்தான் மீது பாகிஸ்தான் நடத்திய தாக்குதலில் 46இற்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ள நிலையில் வான்வழியாக நடத்தப்பட்ட இந்த தாக்குதலால் இரு நாடுகளுக்கும் இடையே பதற்றமான நிலை ஏற்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானில் தலிபான் ஆட்சி பொறுப்பேற்றது முதலே அந்நாட்டின் பெண்களுக்கு எதிரான சட்டங்கள் கடுமையாக மாற்றப்பட்டுள்ளன. பல கெடுபிடிகள், மூட நம்பிக்கைகள், பிற்போக்கு தனமான திட்டங்கள் இருப்பதாக சர்வதேச அளவில் விமர்சிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் தான், அங்கு தலிபான்கள் ஆட்சியை கைப்பற்றிய பின்னர் தங்கள் மீதான தாக்குதல் அதிகரித்துள்ளதாக குற்றம் சாட்டுகிறது அதன் அண்டை நாடான பாகிஸ்தான். குறிப்பாக ஆப்கானிஸ்தானிலிருக்கும் பாகிஸ்தான் தலிபான் கிளர்ச்சி அமைப்பு தங்கள் மீது தாக்கி வருவதாக குற்றம் சாட்டுகிறது பாகிஸ்தான். இந்நிலையில் நேற்றுமுன்தினம் (25) ஆப்கானிஸ்தான் மீது பாகிஸ்தான் வான்வழித் தாக்குதல் நடத்தியது. இத்தாக்குதல் ஆப்கானிஸ்தானின் பக்டிக்கா மாகாணத்தில் 07 கிராமங்கள் குறிவைத்து தாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் ஒரு கிராமம் முற்றிலும் உருக்குலைந்ததாக ஆப்கான் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. இந்த கோரத் தாக்குதலால் பெண்கள், குழந்தைகள் உட்பட 46இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். பயங்கரவாதிகளின் மறைவிடங்களை குறிவைத்தே பாகிஸ்தான் இந்த தாக்குதலை நடத்தியதாக தெரிவித்தாலும் அப்பாவி பொதுமக்கள் உயிரிழந்திருப்பதாகவும் பாகிஸ்தானுக்கு தக்க பதிலடி கொடுப்போம் என்றும் தலிபான் பாதுகாப்பு அமைச்சகம் எச்சரித்துள்ளது.

# சுனாமியில் இறந்தவர்களை நினைவுகூர்ந்த மலையக மக்கள்





(எஸ்.கணேசன்)

சுனாமி ஆழிப்பேரலை இடம்பெற்று நேற்றுடன் 20 ஆண்டுகள் நிறைவடைவதை நினைவுகூரும் வகையில் உயிரிழந்த உறவுகளுக்கு மலையக மக்கள் அஞ்சலி செலுத்தினர்.

கடந்த 2004ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26ஆம் திகதி இலங்கையின் வரலாற்றில் மிகவும் துயரகரமான நிகழ்வாக காலை 9.25க்கு ஆழிப் பேரலை அனர்த்தம் இடம்பெற்றது.

இவ்வனர்த்தத்தில் உயிர்நீத்த இலங்கை உறவுகளுக்கு தமது அஞ்சலியை மலையக மக்கள் செலுத்தினர்.

ஹட்டன் பொலிஸார், நகர வர்த்தகர்கள் மற்றும் ஹட்டன் - டிக்கோயா நகர சபையின் ஏற்பாட்டில் ஹட்டன் புத்தர் சிலைக்கு முன்னால் இடம்பெற்ற அஞ்சலி நிகழ்வுகளில் நகரிலுள்ள வங்கி ஊழியர்கள், நகர வர்த்தகர்கள், சாரதிகள் சங்க உறுப்பினர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# துர்நாற்றமெடுக்கும் குப்பைக் கழிவுகள்
# மூடும் அபாயத்தில்
# மாத்தளை ஆதார வைத்தியசாலை
## வைத்திய நிபுணர் பிரசன்ன பெர்னாண்டோ விசனம்

(எம்.எஸ்.எம். மஸாஹிம்)

மாத்தளை ஆதார வைத்தியசாலையின் சத்திர சிகிச்சைப் பிரிவு மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுகளை முற்றாக மூடும் நிலை உருவாகியுள்ளதாக மேற்படி வைத்தியசாலைப் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் பிரசன்ன பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

மாத்தளை பிரதேச செயலக ஒருங்கிணைப்பு அபிவிருத்திக் குழுக் கூட்டம் மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் புத்தசாசன சமய மற்றும் கலாசார பிரதி அமைச்சருமான கமகெதர திசாநாயக்க தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை (24) இடம்பெற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

''மாத்தளை மாநகர சபையின் மூலம் அன்றாடம் சேகரிக்கக்கூடிய குப்பைகூளங்கள் மேற்படி வைத்தியசாலைக்கு அருகாமையிலிருக்கும் காணியில் கொட்டப்படுவதால் குப்பைகள் அழுகி துர்நாற்றம் வீசுவதாலும் ஈ, நுளம்புகள் மேற்படி வைத்தியசாலைக்குள் வருவதாலும் வைத்தியசாலைப் பணிகளைத் தொடரவோ சத்திர சிகிச்சைப் பிரிவுக்குள் சத்திரசிகிச்சைகளை மேற்கொள்ளவோ முடியாதுள்ளது.

இதனால் அவசர சிகிச்சைப் பிரிவு உட்பட சகல வார்ட்டுகளிலும் நோயாளர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டு வருகின்றனர். ஒரு நோயாளியின் உடற்பகுதி பிரிக்கப்பட்டு சத்திர சிகிச்சையை மேற்கொள்ளும்போது சில சந்தர்ப்பங்களில் நோயாளியின் உடம்புக்குள் கிருமிகள் உட்புகுந்தால் நோயாளி பிறிதொரு நோய்க்கு உட்படக்கூடும். இதனால் பொதுமக்களிடத்திலிருந்து எந்தச் சந்தர்ப்பத்திலும் எதிர்ப்பலைகள் வரும் சாத்தியகூறு இருப்பதால் மேற்படி வைத்தியசாலையில் பணிபுரியும் வைத்தியர்கள், விசேட வைத்தியர்கள் என்னிடம் முறைப்பாடு செய்துள்ளனர் .

இந்த நிலை நீடிக்குமானால் மேற்படி வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளர்களின் உயிர்களுக்கு கூட ஆபத்துகள் ஏற்படக்கூடிய அபாய நிலைகள் இருப்பதால் இவ்வைத்தியசாலையில் சத்திர சிகிச்சை மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுகளை மூடிவிடக்கூடிய அபாய நிலை இருக்கின்றது.

இது சம்பந்தமாக பிரதி அமைச்சர் கமகெதர திசாநாயக்க கவனம் செலுத்த வேண்டும். இதற்கொரு சாதகமான பதிலை தான் எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த கமகெதர திசாநாயக்க,

இது ஒரு பாரிய பிரச்சினை. இதற்கு முடிவுகாண வேண்டியது சகலரினதும் கடமை. நோயாளர்களின் உயிர்களோடு விளையாட முடியாது. உடனடியாக வைத்தியசாலையின் அருகாமையில் குப்பைகளைக் கொட்டாது சூழல் மற்றும் சுகாதாரக் கேடுகள் ஏற்படாதவண்ணம் பொதுமக்கள் வாழக்கூடிய குடியிருப்புகள் அல்லாத தனியான ஓர் இடத்தை இனங்கண்டு மேற்படி குப்பைகளைக் கொட்ட ஆவன செய்யுமாறு மாத்தளை மாநகர சபை அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

# மத்திய மாகாண நாட்டிய, நாடக விழா





(ஜே.எம்.ஹாபீஸ், எம்.ஏ.அமீனுல்லா)

மத்திய மாகாணத்தின் கலாசாரப் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதுடன், குறுநாடகம், சிறுவர் நாடகம் மற்றும் திரைப்படத் துறைகளில் உள்ளவர்களின் திறமைகளை மதிப்பிட்டு அவர்களை தேசிய மற்றும் சர்வதேச மட்டத்துக்கு கொண்டுசெல்லும் நோக்குடன் ஏற்பாடு செய்யப்பட்ட மத்திய மாகாண நாட்டிய, நாடக விழா கண்டி, பல்லேகலையிலுள்ள மத்திய மாகாண சபை கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் (24) இடம்பெற்றது.

மத்திய மாகாண கல்வி, கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளரான மதுபானி பியசேன தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் பல போட்டிப் பிரிவுகளின்கீழ் வெற்றிபெற்ற திறமையான கலைஞர்கள் மதிப்பீடு செய்யப்பட்டு அவர்களுக்கு விருதுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

ரஞ்சித் கே.ராஜபக்ஷ மற்றும் சமன் லியனாச்சி தயாரித்து இயக்கிய ‘ராஜகெய்ய மல் குமாரயோ’ சிறுவர் நாடக விழாவின் வெற்றி நாடகமாக விருது பெற்றது.

# கலஹாவில் திருட்டு;
## யாழ். இளைஞர்கள் கைது!

யாழ்ப்பாணத்திலிருந்து வந்து நாட்டில் பல பகுதிகளிலுமுள்ள வீடுகள் மற்றும் நகையகங்களை உடைத்து கோடிக்கணக்கான பணம், தங்க ஆபரணம், கையடக்கத் தொலைபேசிகள் உட்பட மேலும் பல பொருட்களைக் களவாடிவந்த இளைஞர்கள் குழுவை கம்பளை, கலஹா பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

யாழ்ப்பாணம், வவுனியா, கண்டி, கலஹா, நுவரெலியா மற்றும் கந்தபொல ஆகிய பகுதிகளில் இக்குழுவினர் கொள்ளைச்சம்பவங்களில் ஈடுபட்டுள்ளமை விசாரணைகளில் கண்டறியப் பட்டுள்ளது.

நகையகங்கள், கோவில்கள் மற்றும் தொலைபேசி நிலையங்களே கொள்ளைக் கும்பலின் பிரதான இலக்குகளாக இருந்துள்ளன. கலஹா பகுதியிலும் பல கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

யாழ். நீதிமன்ற எல்லைக்குட்பட்ட பகுதியில் மாத்திரம் இக்குழுவினருக்கு 9 பிடியாணை உத்தரவுகள் உள்ளன என்று கலஹா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

4 வருடங்களாக நாட்டில் பல பகுதிகளிலும் வாடகைக்கு வீடுகளை எடுத்து வாழ்ந்து கொள்ளையடித்து வந்துள்ளமை தெரியவந்துள்ளது.

19, 21, 23 மற்றும் 26 வயதுகளையுடைய இளைஞர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

# வர்த்தகர்களுக்கு தெளிவூட்டல் நிகழ்வு


(மஸ்கெலியா நிருபர்)

சிவனொளிபாதமலை பருவகால யாத்திரை ஆரம்பமாகியுள்ளதால் அங்கு செல்லும் யாத்திரிகர்களுக்கு சுகாதார முறையில் பொருட்களை விற்பனை செய்யும் முகமாக நல்லதண்ணி பிரதேசத்துக்குப் பொறுப்பான பொதுச் சுகாதார அதிகாரிகளால் வியாபாரிகளுக்கு தெளிவூட்டப்பட்டது.

இந்நிகழ்வில் நல்லதண்ணி நகரிலுள்ள உணவகத்தினர், சிற்றுண்டிச்சாலையினர், விருந்தினர் விடுதிகள் நடத்துவோர், நடைபாதை வியாபாரிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இனிவரும் காலங்களில் நாளாந்தம் பொதுச் சுகாதார பரிசோதகர்களால் சகல உணவகங்கள், விருந்தினர் விடுதிகள், சிற்றுண்டிச்சாலைகள், ஏனைய வர்த்தக நிலையங்கள் மற்றும் நடைபாதை வியாபாரங்கள் சோதனைக்குட்படுத்தப்பட்டு முறையற்ற வகையில் வர்த்தகம் செய்பவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என நல்லதண்ணி பிராந்திய பொதுச் சுகாதார பரிசோதகர்கள் நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பொதுச் சுகாதார பரிசோதகர்களான ஆர்.சௌமியமூர்த்தி, அல்விஸ், இமேஸ் தசநாயக்க, செல்வி கோகிலா வீரசிங்க உட்பட பலர் கலந்துகொண்டனர்.

*இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தால் 2023இல் நடத்தப்பட்ட அஹதிய்யா பாடசாலை மாணவர்களுக்கான ஆண்டு இறுதிப் பரீட்சையில் உக்குவளை அஹதிய்யா பாடசாலை மாணவிகளான அப்சரா, ஹபீசா, சஹ்ரா, ஹம்தா, சபிய்யா, ரிஸ்கா, அஸ்மா ஆகியோர் சித்தியடைந்துள்ளனர். 2018இல் நடத்தப்பட்ட இடைநிலை சான்றுப் பரீட்சையிலும் இம்மாணவிகள் சித்தியடைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் அஹதிய்யா அதிபர் ஹலீம்தீன், ஆசிரியைகளான பர்ஹானா, சர்மிளா ஆகியோருக்கு சித்தியடைந்த மாணவியர்கள் நினைவுப் பரிசுகளை வழங்கி நன்றி தெரிவித்தனர். (உக்குவளை நிருபர்)*

# வவுனியா, கோவில்குளம் அகிலாண்டேஸ்வரர் ஆலயத்தில் விசேட வழிபாடும் அஞ்சலியும்




(சிவகுமார் திவியா)

வவுனியா- கோவில்குளம் அகிலாண்டேஸ் வரர் ஆலயத்தில் சுனாமிப் பேரலையில் உயிர் நீத்தவர்களின் 20ஆம் ஆண்டு நினைவாக விசேட வழிபாடும் அஞ்சலி நிகழ்வும் நேற்று (26) இடம்பெற்றன.

வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியம் மற்றும் அகிலாண்டேஸ்வரர் ஆலய தர்மகர்த்தா சபை இணைந்து இந்நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.

இதன்போது உயிரிழந்தவர்களுக்கு இரண்டு நிமிட அகவணக்கம் செலுத்தப்பட்டதுடன், இறந்தவர்களுக்கு ஆத்ம சாந்தி வேண்டி நெய் தீபம் ஏற்றப்பட்டு மோட்ச வழிபாடும் இடம்பெற்றது.

இதில் அந்தணச் சிவாச்சாரியார்கள், ஆலய தர்மகர்த்தா சபையினர், ஆலய பக்தர்கள், தொண்டர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு மோட்ச வழிபாட்டில் ஈடுபட்டனர்.

# கிளிநொச்சியில் இடம்பெற்ற கோர விபத்தில் 2 வயது குழந்தை பலி!
## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் படுகாயம்

(பு.கஜிந்தன்)

கிளிநொச்சி நகரில் இடம்பெற்ற கோர விபத்தில் 2 வயது குழந்தை பலியானதுடன், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் தீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் (25) இரவு 7 மணியளவில் இடம்பெற்றுள்ளது. மோட்டார் சைக்கிளுடன் ரிப்பர் வாகனம் மோதியதியே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

ஏ-9 வீதியால் பயணித்த ரிப்பர் வாகனம் குறித்த மோட்டார் சைக்கிளை மோதி விபத்தை ஏற்படுத்தியதுடன், விபத்து இடம்பெற்ற பகுதியிலிருந்து சுமார் 100 மீற்றர் பாதையை விட்டு விலகி பயணித்துள்ளது.

விபத்தில் சிக்கிய மோட்டார் சைக்கிளையும் ரிப்பர் வாகனம் குறிப்பிட்ட அளவு தூரத்துக்கு இழுத்துச் சென்றுள்ளதுடன், தொழிற்பயிற்சி நிறுவனத்தின் விளம்பரப்பலகை மற்றும் தொலைத்தொடர்புக் கம்பம் உள்ளிட்டவற்றையும் சேதப்படுத்தியுள்ளது.

ரிப்பர் வாகனத்தைச் செலுத்திய சாரதி மதுபோதையில் இருந்ததாக சம்பவ இடத்தில் நின்ற மக்கள் குறிப்பிடுகின்றனர். சாரதியை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

சம்பவத்தில், மோட்டார் சைக்கிளில் பயணித்த 2 வயது குழந்தை பலியானதுடன், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், தந்தை மற்றும் 6 வயதுடைய குழந்தையும் படுகாயமடைந்த நிலையில், கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சைக்குட்படுத்தப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

விபத்தில் படுகாயமடைந்த குழந்தையை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலைத் தகவல் தெரிவிக்கின்றது.

சம்பவம் தொடர்பில் பூர்வாங்க விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# யாழ். விபத்தில் படுகாயமடைந்த முதியவர் உயிரிழப்பு

(பு.கஜிந்தன்)


யாழ்ப்பாணத்தில் விபத்தில் படுகாயமடைந்த முதியவரொருவர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார். வண்ணார்பண்ணை பகுதியைச் சேர்ந்த நடராசா நாகராசா (வயது 76) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,இவர் கடந்த 08ஆம் திகதி மகள் வீட்டுக்கு செல்வதற்காக கல்வியங்காடு - ஜமுனா வீதி ஊடாக துவிச்சக்கர வண்டியில் பயணித்துக்கொண்டிருந்தார். இதன்போது கல்வியங்காடு பகுதியிலிருந்து வந்துகொண்டிருந்த காரொன்று மோட்டார் சைக்கிள் மீது மோதியபோது, குறித்த மோட்டார் சைக்கிள் துவிச்சக்கர வண்டியில் சென்ற குறித்த நபர்மீது மோதியுள்ளது.

இந்நிலையில், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், சிகிச்சையின் பின் 10.12.2024 அன்று வீடு சென்றுள்ளார். இருப்பினும், நேற்று முன்தினம் காலை வீட்டில் உயிரிழந்துள்ளார்.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

# சுனாமியில் உயிரிழந்த உறவுகளுக்கு உடுத்துறையில் அஞ்சலி!



(பு.கஜிந்தன்)



யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு, உடுத்துறை சுனாமி நினைவாலயத்தில் 20ஆவது சுனாமி நினைவேந்தல் நிகழ்வு நேற்றுக் காலை 9.00 மணியளவில் இடம்பெற்றது.

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்தின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பொது ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு நினைவுத் தூபிக்கான மலர் மாலையை மருதங்கேணி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, ஜனநாயகப் போராளிகள் கட்சித் தலைவர் வேந்தன், ஈ.பி.டி.பி. பேச்சாளர் ஐ.சிறிரங்கேஸ்வரன் உட்படப் பலர் அணிவித்தனர். இதனைத் தொடர்ந்து தேசியக் கொடியை மருதங்கேணி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏற்றிய நிலையில் பொது ஈகைச்சுடரை வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக கிராம சேவை நிருவாக உத்தியோகத்தர் தோமஸ் யூட் ஏற்றிவைக்க தொடர்ந்து சமநேரத்தில் உயிர்நீத்த மக்களுக்கான சுடர்களும் ஏற்றப்பட்டன.

இந்நிகழ்வில் வண.பிதாக்கள், கட்சிப் பிரதிநிதிகள், அரசியல்வாதிகள், உயிரிழந்தவர்களின் உறவுகள் உள்ளிட்ட நூற்றுக்கணக்கானவர்கள் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தியமை குறிப்பிடத்தக்கது.

# யாழில் அரச போக்குவரத்து சேவையில் ஈடுபடும் ஊழியர்களைத் தாக்கிய ஒருவர் கைது!

(பு.கஜிந்தன்)

யாழ்ப்பாணம் பஸ்நிலையத்துக்குள் புகுந்த இருவர் இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான காரைநகர் சாலை பஸ் சாரதி மற்றும் யாழ். சாலை நடத்துனர் மீது தாக்குதலை நடத்திவிட்டுத் தப்பியோடியுள்ளனர். இந்நிலையில், தாக்குதல் நடத்திய ஒருவர் நேற்று முன்தினம் (25) யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

கடந்த 24ஆம் திகதி மாலை யாழ்ப்பாணம் பஸ் நிலையத்துக்குள் நுழைந்த இருவரே இவ்வாறு தாக்குதல் நடத்தியுள்ளனர். தாக்குதலில் காயமடைந்த இருவரும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில், நேற்று முன்தினம் அரச போக்குவரத்துத் துறையில் கடமையில் ஈடுபடும் யாழ் - காரைநகர் ஊழியர்கள் பணிப்பகிஷ்கரிப்பை மேற்கொண்டனர். அத்துடன், கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகரனுடனும் இது குறித்துக் கலந்துரையாடினர்.

இவ்வாறான பின்னணியில் இந்தச் சம்பவம் குறித்து விரைந்து நடவடிக்கைகளை எடுக்குமாறு, கடற்றொழில் அமைச்சர் பொலிஸாரிடம் தெரிவித்தார். அத்துடன், அவர் வழங்கிய வாக்குறுதியின் பிரகாரம் பணிப்பகிஷ்கரிப்பு ஒரு மணிக்குப் பின்னர் கைவிடப்பட்டது.

தாக்குதல் நடத்திய ஒருவர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், மற்றையவர் தலைமறைவாகியுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.

# இலங்கை - நியூசிலாந்து அணிகள் மோதும் ரி20 தொடர் நாளை ஆரம்பம்



# 11 ஆண்டுகளின் பின் தொடரை கைப்பற்றுமா இலங்கை?

**அகீல் சிஹாப்**



சரித் அசலங்க தலைமையிலான சுற்றுலா இலங்கை அணிக்கும் மிட்செல் சான்ட்னர் தலைமையிலான நியூசிலாந்து அணிக்குமிடையிலான மூன்று போட்டிகள் கொண்ட ரி20 சர்வதேச தொடர் நாளை சனிக்கிழமை (28) மவுண்ட் மவுங்கானுவில் அமைந்துள்ள பேய் ஓவல் கிரிக்கெட் மைதானத்தில் ஆரம்பமாகிறது.

இலங்கை கிரிக்கெட் அணியானது வெள்ளைப்பந்து கிரிக்கெட் தொடரில் (ஒருநாள் மற்றும் ரி20) விளையாடுவதற்காக நியூசிலாந்துக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இரு அணிகளுக்குமிடையில் 3 போட்டிகள் கொண்ட ரி20 சர்வதேச தொடர் மற்றும் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச தொடர் என்பன நடைபெறவுள்ளன.

**இலங்கையின் நியூசிலாந்து சுற்றுப்பயணம்:**

இரு அணிகளுக்குமிடையிலான முதல் தொடராக 3 போட்டிகள் கொண்ட ரி20 சர்வதேச தொடர் நாளை ஆரம்பமாகிறது. இந்த ஆட்டம் இலங்கை நேரப்படி மு.ப. 11.45 மணிக்கு ஆரம்பமாகிறது. தொடர்ந்து 30ஆம் திகதி இரண்டாவது போட்டி ஒரே மைதானத்தில் நடைபெறுகிறது. மூன்றாவது ரி20 போட்டி ஜனவரி 02ஆம் திகதி நெல்சனில் நடைபெறுகிறது. அடுத்து 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச தொடர் 05ஆம் திகதி ஆரம்பமாகிறது.

**ஒரு மாதத்தின் பின் மீண்டும் வெள்ளைப்பந்துத் தொடர்:**


நியூசிலாந்து கிரிக்கெட் அணி இறுதியாக கடந்த நவம்பரில் இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு வெள்ளைப்பந்து தொடரில் ஆடியது. இதில் முதலில் நடைபெற்ற ரி20 சர்வதேச தொடர் 1-1 என சமநிலையில் நிறைவடைந்தது. முதல் ஆட்டத்தில் இலங்கை வெற்றியீட்ட, இரண்டாவது போட்டியில் 108 என்ற இலகுவான வெற்றியிலக்கை இலங்கை அணி கோட்டை விட்டது. இதனால் 11 ஆண்டுகளின் பின் நியூசிலாந்துடன் இருதரப்பு ரி20 தொடரை வெல்லும் பொன்னான வாய்ப்பை இலங்கை அணி மண்ணாக்கியது.

**செப்டெம்பரில் இலங்கை மண்ணில் டெஸ்ட் ஆடிய நியூசிலாந்து:**

கடந்த செப்டெம்பர் மாதம் நியூசிலாந்து அணி இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது. இந்தத் தொடரை இலங்கை அணி 2-0 என்ற அடிப்படையில் கைப்பற்றி வரலாற்று வெற்றியைப் பதிவு செய்தது. மீண்டும் நவம்பரில் நியூசிலாந்து அணி வெள்ளைப்பந்து தொடரில் ஆடுவதற்காக இலங்கை வந்த நிலையில் தற்போது இலங்கை அணி நியூசிலாந்து சென்றுள்ளது.

**நேருக்கு நேர்:**

2005ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் கிரிக்கெட் உலகில் ரி20 சர்வதேச போட்டிகள் அறிமுகமான பின்னர் கடந்த 2006ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இலங்கை - நியூசிலாந்து அணிகளுக்கிடையில் முதல் ரி20 சர்வதேச போட்டி நடைபெற்றது. அன்று தொடக்கம் இன்று வரையில் இலங்கை – நியூசிலாந்து அணிகளுக்கிடையில் 25 ரி 20 சர்வதேச போட்டிகள் நடைபெற்றுள்ளன. இதில் நியூசிலாந்து அணி 14 போட்டிகளிலும் இலங்கை அணி 10 போட்டிகளிலும் வெற்றி பெற்றுள்ளன. ஒரு போட்டி முடிவற்றதாக அமைந்தது.




**இருதரப்பு தொடர்கள்:**

இலங்கை - நியூசிலாந்து அணிகளுக்கிடையில் இதுவரையில் 10 இருதரப்பு ரி20 சர்வதேச தொடர்கள் நடைபெற்றுள்ளன. இதில் 5 தொடர்களை நியூசிலாந்து அணி வென்றுள்ள நிலையில், இலங்கை அணி ஒரேயொரு தொடரை மாத்திரம் வென்றுள்ளது. 4 தொடர்கள் சமநிலையில் நிறைவடைந்துள்ளன.

**11 ஆண்டுகளாக ரி20 தொடரை கைப்பற்றாத இலங்கை:**

இலங்கை அணி இறுதியாக 2013 நவம்பரில் நியூசிலாந்து அணியுடன் இரு போட்டிகள் கொண்ட ரி20 தொடரை 1-0 என்ற அடிப்படையில் கைப்பற்றியதன் பின்னர் தற்போது 11 ஆண்டுகளாக நியூசிலாந்து அணியுடன் ரி20 சர்வதேச தொடரைக் கைப்பற்ற முடியாத நிலையில் உள்ளது. இந்த 11 ஆண்டுகால இடைவெளியில் 5 தொடர்கள் நடைபெற்றுள்ள நிலையில், நான்கில் நியூசிலாந்து அணி வென்று சாதித்துள்ளது. இறுதியாக கடந்த நவம்பரில் நடைபெற்ற தொடர் 1-1 என சமநிலையானது.

**புதிய தலைமை அசலங்கவின் வெற்றிகரமான பயணம்:**

இலங்கை வெள்ளைப்பந்து கிரிக்கெட் (ஒருநாள், ரி20) அணியின் புதிய தலைவராக தற்போது சரித் அசலங்க செயற்பட்டு வருகிறார். கடந்த ஜூலை மாதம் நடைபெற்ற இந்திய அணியுடனான இருதரப்பு தொடரின் போது இந்த மாற்றம் நிகழ்ந்தது. சரித் அசலங்க தலைமையில் இலங்கை அணி இந்தியாவுடன் ரி20 தொடரை இழந்தாலும் ஒருநாள் தொடரை 27 வருடங்கள் பின் வென்று சாதனை படைத்தது. அதன் பின் மேற்கிந்தியத் தீவுகள் அணியுடனான ஒருநாள் மற்றும் ரி20 தொடர்களை அசலங்க தலைமையிலான இலங்கை அணி கைப்பற்றி வரலாறு படைத்தது. மேலும் நியூசிலாந்து அணியுடன் கடந்த மாதம் நிறைவடைந்த ரி20 தொடரை சமநிலைப்படுத்திய இலங்கை அணி, ஒருநாள் தொடரை வென்று சாதித்தது.

**பயிற்சி ஆட்டத்தில் அசத்திய இலங்கை**

நியூசிலாந்து சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக் கும் இலங்கை அணி ரி20 தொடர் ஆரம்பமாக முன்னர் கடந்த திங்கட்கிழமை நியூசிலாந்து பதினொருவர் அணியுடன் ரி20 மற்றும் ரி10 போட்டிகளில் ஆடியது. முதலில் நடைபெற்ற ரி20 போட்டியில் இலங்கை அணி 7 விக்கெட்டுகளினால் வெற்றியீட்டிய நிலையில் அடுத்து நடைபெற்ற ரி10 போட்டியில் 32 ஓட்டங்களினால் வெற்றியீட்டியது.

**சனத்தின் பாசறையில் நியூசிலாந்துடனும் சரித்திரம் படைக்குமா இலங்கை?**

இலங்கை கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளராக சனத் ஜெயசூரிய ஒரு வருட கால ஒப்பந்தத்தின் அடிப்படையில் செயற்பட்டுவரும் நிலையில், அவரின் பயிற்றுவிப்பில் இலங்கை அணி பல சாதனை வெற்றிகளைப் பதிவு செய்துள்ளது.

இவ்வாறு பல சாதனைகளை சனத் ஜெயசூரியவின் பயிற்றுவிப்பில் இலங்கை அணி பதிவுசெய்துள்ள நிலையில் நியூசிலாந்து அணியுடனும் 11 ஆண்டுகளில் ரி20 சர்வதேச தொடரை வென்று சாதிக்கும் என்ற எதிர்பார்ப்பு ரசிகர்களிடத்தில் உள்ளது.

## பும்ராவின் பந்தில் சிக்ஸர் அடித்து சாதனை படைத்த அறிமுக வீரர்

இந்திய – ஆஸி. அணிகளுக்கிடையில் நடைபெற்றுவரும் 4ஆவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலிய அணியின் ஒப்பனர்களாக அறிமுக வீரர் சாம் கான்ஸ்டாஸுடன் கவாஜா களமிறங்கினர். இதில் அதிரடியாக விளையாடிய கான்ஸ்டாஸ் 65 பந்துகளில் 60 ஓட்டங்களை எடுத்து ஜடேஜா பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

இப்போட்டியின் மூலம் அறிமுகமான 19 வயது இளம் வீரர் சாம் கான்ஸ்டாஸ் பும்ராவின் ஓவரில் 2 சிக்ஸர்களை பறக்கவிட்டார். இதன்மூலம் டெஸ்ட் போட்டிகளில் பும்ராவுக்கு எதிராக குறிப்பாக, 4,483 பந்துகளுக்குப் பிறகு சிக்ஸர் அடித்த வீரராக மாறி சாதனை படைத்துள்ளார்.




2021ஆம் ஆண்டுக்குப் பிறகு பும்ராவுக்கு எதிராக சிக்ஸர் அடித்த வீரர் என்ற பெருமையை கான்ஸ்டாஸ் பெற்றுள்ளார். மேலும், டெஸ்ட் போட்டிகளில் பும்ராவின் முதல் 33 பந்துகளில் அதிக ஓட்டங்களை எடுத்த ஓபனர் துடுப்பாட்ட வீரர் என்ற சாதனையையும் கான்ஸ்டாஸ் படைத்துள்ளார். பும்ராவின் முதல் 33 பந்துகளில் கான்ஸ்டாஸ் 34 ஓட்டங்களை எடுத்தார்.

## முன்னாள் கிரிக்கெட் வீரரின் தந்தைக்கு ஏழு ஆண்டுகள் சிறை

முன்னாள் இந்திய கிரிக்கெட் வீரர் நமன் ஓஜாவின் தந்தை வினய் ஓஜா உட்பட 4 பேருக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2013ஆம் ஆண்டு, மத்திய பிரதேச மாநிலம் பெதுல் நகரத்தில் அமைந்துள்ள ஜோல்கேடா கிராமத்திலுள்ள பாங்க் ஒப் மகாராஷ்டிரா கிளையில் ரூ.1.25 கோடி முறைகேடு நடந்துள்ளது. இது தொடர்பாக 6 பேர் மீது பொலிஸார் வழக்குப்பதிவு செய்துள்ளனர். இந்த வழக்கில் 11 ஆண்டுகளுக்குப் பிறகு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்த முறைகேட்டில் மூளையாக செயற்பட்ட அபிஷேக் ரத்னத்துக்கு 10 ஆண்டுகள் சிறைத் தண்டனையும் 80 இலட்சம் அபராதமும் விதிக்கப்பட்டது. முன்னாள் கிரிக்கெட் வீரர் நமன் ஓஜாவின் தந்தையும் அப்போது வங்கியில் உதவி முகாமையாளராகப் பணியாற்றியவருமான வினய் ஓஜாவுக்கு 7 ஆண்டுகள் சிறைத் தண்டனையும் ரூ.7 இலட்சம் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

## விளையாட்டுத் துளிகள்

**அரியானா மகளிர் அணிக்கு எதிரான ஆட்டத்தில் 390 என்ற வெற்றி இலக்கை நோக்கி ஆடிய வங்காள மகளிர் அணி, 5 பந்துகள் மீதமிருந்த சூழலில், 390 ஓட்டங்களை எடுத்து வெற்றி இலக்கை அடைந்து வரலாறு படைத்தது. ஒருநாள் போட்டியில் இதற்கு முன்பு, 2019ஆம் ஆண்டு நியூசிலாந்தில் நடந்த உள்ளூர் போட்டியில் கேன்டர்பரிக்கு எதிராக விளையாடிய நார்தன் டிஸ்டிரிக்ட்ஸ் அணி 309 ஓட்டங்கள் என்ற இலக்கை எட்டியதே இதுவரை சாதனையாக இருந்து வந்தது.**

**டில்லி மற்றும் மாவட்ட சங்கத்தின் தலைவராகத் தொடர்ந்து மூன்றாவது தடவையாக ரோகன் ஜெட்லி மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். ரோகன் ஜெட்லி 1,577 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார். அவரை எதிர்த்து போட்டியிட்ட முன்னாள் இந்திய கிரிக்கெட் வீரரும் மக்களவை எம்.பியுமான கீர்த்தி ஆசாத் 777 வாக்குகளைப் பெற்று தோல்வியடைந்தார். 35 வயதான ரோகன் ஜெட்லி முன்னாள் மத்திய அமைச்சரும் 14 ஆண்டுகள் டில்லி கிரிக்கெட் சங்கத் தலைவராக இருந்தவருமான அருண் ஜெட்லியின் மகன் ஆவார். புதிய நிர்வாகிகளின் பதவிக் காலம் 3 ஆண்டுகள் ஆகும்.**

**மேற்கிந்தியத் தீவுகள் மகளிர் அணியுடனான 2ஆவது ஒருநாள் போட்டியிலும் 115 ஓட்டங்களினால் வெற்றியீட்டிய இந்திய மகளிர் அணி 3 போட்டிகள் கொண்ட தொடரை 2-0 என்ற அடிப்படையில் கைப்பற்றியுள்ளது. மேலும் குறித்த போட்டியில் 358 ஓட்டங்களைக் குவித்த இந்திய அணி மகளிர் ஒருநாள் சர்வதேச கிரிக்கெட்டில் தங்களது அதிகபட்ச ஓட்டங்களை சமன் செய்தது.**

**ஐ.சி.சி. டெஸ்ட் பந்து வீச்சாளர்கள் தரவரிசையில் இந்திய வீரர் பும்ரா 904 புள்ளிகளுடன் முதலிடத்தில் தொடருகிறார். இதன்மூலம் இந்திய பந்துவீச்சாளர்களில் அதிக தரவரிசை புள்ளியைப் பெற்றவரான அஸ்வினின் வாழ்நாள் சாதனையை சமன் செய்துள்ளார். இதற்கு முன்னர் அஸ்வின் 2016ஆம் ஆண்டு டெஸ்ட் பந்துவீச்சு தரவரிசையில் 904 புள்ளிகளைப் பெற்றிருந்தார்.**

**ஐ.சி.சியினால் வெளியிடப்பட்ட புதிய டெஸ்ட் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசையில் தென்னாபிரிக்காவுடன் அண்மையில் நிறைவடைந்த டெஸ்ட் தொடரில் 4 இன்னிங்ஸ்களில் ஓர் அரைச்சதத்துடன் 156 ஓட்டங்களைப் பெற்ற தினேஷ் சந்திமால் 2 இடங்கள் முன்னேற்றம் கண்டு 12 ஆவது இடத்தைப் பிடித்தார். அதேபோன்று, இலங்கை டெஸ்ட் அணித் தலைவர் தனஞ்சய டி சில்வாவும் 15 ஆவது இடத்தில் இருந்து 13 ஆவது இடத்துக்கு ஏற்றம் கண்டுள்ளார்.**

## ரன்தரு ஹொக்கி சம்பியன் கிண்ணம் மாத்தளை இந்து தேசிய கல்லூரி வசம்



(எம்.எஸ்.எம். மஸாஹிம்)

ஸ்ரீலங்கா பாடசாலை ஹொக்கி சம்மேளனம் 14 வயதுக்கு உட்பட்ட பாடசாலை ஹொக்கி குழுக்களிடையே நடத்திய ஹொக்கி போட்டியில் 20 அதிகப்படியான கோல்களை (புள்ளிகள்) பெற்று மாத்தளை இந்து தேசிய கல்லூரி அணி ரன்தரு சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

மேற்படி ஹொக்கி சுற்றுப்போட்டி கடந்த 17,18,19,20 ஆம் திகதிகளில் மாத்தளை எட்வட் ஹொக்கி மைதானத்தில் இடம்பெற்றது. இலங்கை பாடசாலை ஹொக்கி அணிகளிலிருந்து மொத்தம் 60 அணிகள் இப்போட்டியில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

முதலாவது போட்டி மாத்தளை இந்துக் கல்லூரி அணிக்கும் கொழும்பு இசிபத்தன கல்லூரிக்குமிடையில் இடம்பெற்றபோது போட்டி 01-01 என்ற சமநிலையில் முடிவு பெற்றது. அதைத் தொடர்ந்து மாத்தளை இந்துக் கல்லூரி அணிக்கும் கிராந்துருகோட்டை கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் மாத்தளை இந்துக் கல்லூரி 04-00 என்ற அடிப்படையில் வெற்றிபெற்றது. அதைத் தொடர்ந்து மாத்தளை இந்துக் கல்லூரி மற்றும் கேகாலை வித்தியாலய அணிகளுக்கிடையில் இடம்பெற்ற போட்டியில் இந்துக் கல்லூரி அணி 07-00 என்ற அடிப்படையில் வெற்றிபெற்றது.

மாத்தளை இந்துக் கல்லூரி மற்றும் கெகிராவ மத்திய மகா வித்தியாலய அணிகளுக்கிடையில் இடம்பெற்ற போட்டியில் மாத்தளை இந்துக் கல்லூரி அணி 05-00 என்ற அடிப்படையில் வெற்றிபெற்றது. இறுதியாக மாத்தளை இந்துக் கல்லூரி அணி கண்டி பாததும்பர அணியோடு மோதியதில் இந்துக் கல்லூரி அணி 03-00 என்ற அடிப்படையில் வெற்றிபெற்றதோடு இப்போட்டியில் ஆகக் கூடுதலான 20 கோல்களைப் பெற்று இவ் ஹொக்கி களியாட்டத்தில் ரன்தரு சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

இப்போட்டியின் விசேட அதிதியாக மத்திய மாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் அசோக ஜயவர்தன கலந்து கொண்டார். மாத்தளை இந்துக் கல்லூரி ஹொக்கி விளையாட்டு பயிற்றுவிப்பாளராக இந்திரவன்ச ஹேரத் பணிபுரிகின்றமை குறிப்பிடத்தக்கது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7